Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

சேலம் திருமணங்கள்!



சேலம் நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி புரோப்ரைட்டர் ஸ்ரீ V. L. நரசு அவர்களின் குமாரத்தி சௌபாக்யவதி சகுந்தலாவுக்கும், கடலூர் டாக்டர் V. M. வெங்கட்ராம அய்யர்., B. A., M. B. B. S., A. D. M. O. அவர்களின் குமாரர் சிரஞ்சீவி V. கிருஷ்ணமூர்த்திக்கும், சேலத்தில் சென்ற 14 - 4 - 1944ல் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.



சேலம் நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி புரோப்ரைட்டர் ஸ்ரீ V. L. நரசு அவர்களின் சகோதரரின் குமாரத்தி சௌபாக்யவதி சுலோசனாவிற்கும், கோயமுத்தூர் ஸ்ரீ S. A. சீதாராம அய்யர் குமாரர் சிரஞ்சீவி S. கணபதிக்கும் சேலத்தில் சென்ற 14 - 4 - 1944ல் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது.

கல்கி



KALKI ஏப்ரல் 30, 1944 4 அணா

லாம். அவன் கஷ்டத்தைப் பார்க்க முடிய வில்லை" என்றாள் மைதிலி நடுங்கிய குரலில்.

ரங்கசாமி மௌனமாயிருந்தான். பிறகு, "ஆமாம், நீ கோபாலன் தங்கைதானே? மனிதர்களை விட்டுப் பிரிந்திருப்ப தென்றால் உங்களுக்கு ரொம்பவும் சுலபமாயிருக் கிறது!" என்றான்.

மைதிலி கணவனின் காலடியில் வேரற்ற மரம்போல் சாய்ந்துவிட்டாள். கணவனின் பதிலைக் கேட்டு அவள் வெட்கித் தலை குனிந்தாள்.

"மீனாவுக்கு உடம்பு இப்படியிருக்கிறதே, ஒரு தந்தியாவது கோபாலனுக்குக் கொடுங் களேன்" என்று கெஞ்சினாள் மைதிலி.

"என் கையினாலேயா? அவனுக்கா? ஒரு நாளும் மாட்டேன். என் தங்கையை நான் இழந்தாலும் இழப்பேனே ஒழிய அவனை ஒரு நாளும் நான் கூப்பிட மாட் டேன்" என்றான் கோபாலன்.

"ஐயோ! நான் என்ன செய்வேன்? நானாவது ஊருக்குப் போய் அண்ணாவைப் பார்க்கிறேன் என்றாலும் கேட்க மாட்டேன் என்கிறீர்களே!"

"பொர்ச செய்து இந்தக் காலத்தில் வேலைகூடக் கிடைப்பதில்லை. அப்படி யிருக்கும்போது, அன்பு எப்படிக் கிடைக் கும்?" என்றான் ரங்கசாமி.

"அப்படியானால் நான் அண்ணாவை இங்கே உடனே வரச்சொல்லித் தந்தி கொடுக்கத்தான் போகிறேன்" என்றாள் மைதிலி.

"தலை யிருக்க வால் எப்படி ஆடும்? உன் காரியத்தைப் பார், அதிகப் பிரசங்கி" என்றான் ரங்கசாமி.

5

நாலைந்து நாட்களுக்கெல்லாம் எதிர் பாராத சம்பவம் நடந்தது. அன்று மாலை கோபாலன் வெகு வேகமாக உள்ளே வந்தான்.

"மாப்பிள்ளை! மீனாவுக்கு உடம்பு எப்படி யிருக்கு?" என்று அவன் கேட்டான்.

"என்? ரொம்ப ஜோராயிருக்கிறது. ஒரு சுற்றுப் பெருத்துக்கூட இருக்கிறாள் சந்தோஷத்தில்" என்றான் ரங்கசாமி கேலியாக.

"உடம்பு சரியில்லை என்று தந்தி வந்ததே!"

"தந்தியா? உனக்குத் தந்தி யார் கொடுத் தது? எங்கே அதை எடு, பார்க்கலாம்?" என்றான் ரங்கசாமி ஆத்திரத்துடன்.

கோபாலன் தந்தியை எடுத்துக் கொடுத் தான். ரங்கசாமியின் பெயரில் அது கொடுக்கப்பட்டிருந்தது.

"மைதிலி! நீ இந்தத் தந்தியைக் கொடுத் தாயா? நான் தந்தி கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லையா?"

"நான் கொடுக்க வில்லை" என்றாள் மைதிலி.

கோபாலன் குறுக்கிட்டு, "தந்தி யார் கொடுத்தால் என்ன? ஆனால் தந்தி கிடைத்தபிறகு தான் நான் வந்தேன் என் பது கிடையாது. நானே புறப்பட்டு வந்து உன்னிடம் மன்னிப்புக் கேட்டு மீனாவை அழைத்துக் கொண்டு போக லாம் என்று வந்தேன். நான் புறப் பட்டதற்கும் இந்தத் தந்தி வந்ததற்கும் சரியாயிருந்தது. மீனா இங்கே வந்ததும் நீ மைதிலியை அங்கே அனுப்பி விடுவாய் என்று பார்த்தேன். ஆனால் நீ இவ்வளவு கண்ணியமாக நடந்து, என்னைத் தலை கவிழும்படி செய்து விட்டாய். நிச்சயமாக நான் மறுபடியும் தலை கவிழும்படி நடந்து கொள்ள மாட்டேன்" என்றான்.

கோபாலன் மனம் மாறித் தங்கையை அழைத்துக் கொண்டுபோக வந்ததில் ரங்க சாமி குதூகலம் அடைந்தபோதிலும், அந்தத் தந்தி விஷயம் மட்டும் அவன் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. தன் சொல்லைத் தட்டிவிட்டு, மைதிலி தந்தி கொடுத்திருப்பாளா? — அவள் கொடுத் திராவிட்டால் வேறு யார் கொடுத்திருப் பார்கள்?—இதுதான் இவனுக்குப் புரியாத மாயமாயிருந்தது.

அன்று சாயங்காலம் ரங்கசாமி, கட்டிலில் படுத்திருந்த மீனாவிடம் சென்று மெதுவாக, "மீனா! நீதான் உன் அகமுடையாருக்குத் தந்தி கொடுத்தாயா?" என்றான்.

மீனா, அழுகை பீறிக்கொண்டு வர, "நான்தான் அண்ணா, தந்தி கொடுக்கச் சொன்னேன். நான் வந்ததிலிருந்து உங்கள் சந்தோஷத்திற்குப் பங்கம் வந்து விட்ட தென்று எனக்குத் தெரியாதா? நீங்கள் குடித்தனம் செய்வதைப் பார்த்தாவது என் தவறைத் திருத்திக்கொள்ள வேண்டாமா? என் ராமர் இருக்குமிடம்தானே எனக்கு அயோத்தி?" என்றாள். ஜன்னலுக்கு அப்பா லிருந்து தேன் குடித்த நரிபோல் இதைப் பார்த்துக் கொண்டிருந்தான் கோபாலன்.

ஏதோ தேறுதல் வார்த்தைகள் சொல்லிக் கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில், வாசலில் கார் வந்து நின்றது. கடைத் தெருவில் ஏதோ சாமான் வாங்கி வரப் போயிருந்த மைதிலி உள்ளே வந்தாள். உள்ளே கட்டிலில் அழுது கொண்டிருக்கும் மீனுவையும் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் கணவனையும் பார்த்துவிட்டுத் திடுக்கிட்டாள் அவள்.

"மீனு! என்ன சமாசாரம்? ஐயோ, ஏனம்மா அழுகிறாய்? நீங்கள்தான் சொல்லுங்களேன்? என்ன நடந்தது?" என்று பதறிக் கேட்டாள் மைதிலி. ரங்கசாமியின் உடம்பு கோபத்தால் துடித்தது. "எல்லாம் உன் அருமை அண்ணா இருக்கிறானே, அவன் செய்த வேலைதான்" என்றான்.

"அண்ணாவா? அவன் என்ன செய்தான்?" என்று திகிலுடன் கேட்டாள் மைதிலி.

கோபமும் துயரமும் தொனிக்கும் குரலில், மைதிலியிடம் ரங்கசாமி அவள் தமையன் புரிந்த திருவிளையாடல்களை யெல்லாம் சொன்னான். மைதிலி அழ ஆரம்பித்து விட்டாள்.

"நீ வருத்தப்பட்டு என்ன செய்கிறது? அவனல்லவா வருந்த வேண்டும்? என் தங்கையின் சுகத்தைத்தான் அவன் கருதவில்லை. உன் சுகத்தையாவது அவன் கருதி சரியாக நடந்து கொண்டிருக்கலாம் அல்லவா?" என்றான் ரங்கசாமி. இதற்குப் பிறகு ரங்கசாமி துக்கத்தால் மேலே பேச முடியவில்லை.

4

மீனு, சகோதரன் வீட்டுக்கு வந்து ஒரு வாரம் ஆகிறது. மனநோய் அவள் மெல்லிய தேகத்தைப் பாதித்து விட்டது. அன்ன ஆகாரமில்லாமல் அவள் படுத்த படுக்கையாகி விட்டாள். "மீனு! கொஞ்சமாவது சாப்பிடு, அம்மா! எதற்காக இப்படிச் சித்திரவதை செய்து கொள்கிறாய்?" என்று கெஞ்சினான் ரங்கசாமி.

தங்கையின் மாளாத துயரத்தைப் பார்க்கப் பார்க்க அவனுக்குக் கோபாலன் மீது ஆத்திரம் தாங்கவில்லை. அந்தப் பாதகனுக்குப் புத்தி கற்பிக்க ஒரே ஒரு வழிதான் அவனுக்குத் தோன்றிற்று. பதிலுக்குப் பதிலாக, எட்டிக்குப் போட்டியாக, அவன் தங்கைக்கும் வாழ்வு இல்லாமல் செய்துவிட வேண்டும். உடனே அவளைத் தமையன் வீட்டுக்கு அனுப்பி விடவேண்டும். அப்பொழுதாவது கோபாலனுக்குப் புத்தி வரும் அல்லவா?

ஆனால், ரங்கசாமிக்கு அப்படிப்பட்ட காரியம் செய்ய எப்படி மனம் வரும்? மைதிலி ஊருக்குப் போன பிறகு எப்படித்தான் அவனால் தனித்திருக்க முடியும்? — என்ன அசட்டுக் காரியம் செய்ய நினைத்தோம் என்றுஎண்ணி எண்ணி அவன் வருந்தினான். கோபாலன்தான் முட்டாள்தனமாய் நடந்து கொண்டானென்றால் தானும் அப்படி நடந்து கொள்ளலாமா? கோபத்தையும் துவேஷத்தையும் களைந்தெறிந்து விட்டு மனைவியிடம் சென்றான்.

"மைதிலி! நீ மீனுவுக்கு ஆறுதல் சொல்ல வேண்டுமே தவிர, நீயும் அழுவதில் என்ன பயன்?" என்றான் ரங்கசாமி.

"அவனோ என்னோடு பேசுகிறதில்லை. நான் தங்கள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்னைப் பிறந்தகம் அனுப்பி விடுங்கள். அப்பொழுதாவது அண்ணாவுக்குப் புத்தி வந்து அவளை அழைத்துக் கொள்கிறானா என்று பார்க்க



★


விபரீத பலன்

முதல்வர் :- உங்க... க... க... கி... கி... ட்டே இந்த சமாசாரம் நடந்ததைத் தான் சொன்னபடி அப்படி ... டி ... டியே சொல்லச் சொன்னார்.

மற்றவர் :— அது சரி! நீங்கள் ஏன் திடீரென்று திக்குவாயராக ஆகி விட்டீர்கள்?

முதல்வர் :— இல்லை இல்லை; சொன்னவர் திக்குவாயர். உங்களிடம் அவர் சொன்ன சமாசாரத்தை அப்படியே சொல்லச் சொன்னார். அதனால்தான்!

★



மாயத்தந்தி


★

வஸந்தன்

★

கண்ணீரும் கம்பலையுமாக உள்ளே வந்த தங்கை மீனாவைப் பார்த்ததும், ரங்கசாமி இடி விழுந்தவன்போல் அயர்ந்து நின்று விட்டான். "மீனா!" என்று அவன் அடி வயிற்றிலிருந்து அப்பொழுது கிளம்பிய வார்த்தையானது, தாங்க முடியாத தாபத்தையும், சொல்ல முடியாத சோகத்தையும் வெளியிடுவதா யிருந்தது. மேலும் அந்த ஒரு வார்த்தை; "இது நிஜந்தானா? நீ எழுதியது போலவே வந்து விட்டாயா?" என்று மீனாவைக் கேட்பது போலவும் இருந்தது.

மீனா பதில் சொல்லாமல், குழந்தைபோல் தேம்பி அழுது கொண்டே கட்டிலில் சாய்ந்து விட்டாள். அவளுக்கு ஆறுதலாக ஒரு வார்த்தைகூட ரங்கசாமியின் வாயி லிருந்து வெளிவரவில்லை. ஏனெனில், அவன் மனத்தில் அப்பொழுது கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டிருந்தது — தன் தங்கையை இக் கதிக்குள்ளாக்கிய அவள் கணவன் கோபாலன் மீதுதான்.



யாருக்கும் ஒரு தீங்கும் நினையாதவனும், இயற்கையாகவே சாந்தகுண சீலனுமான ரங்கசாமி அந்தக் கண நேரத்தில் தன் நிலையை மறந்து விட்டான். தன் தங்கைக்குத் துரோகம் செய்த கோபாலன் தலையில் ஒரு பேரிடி விழுந்து அவனை என் பஸ்பமாக்கக் கூடாது என்று பகவானைப் பிரார்த்தித்தான்.

பிறகு சமாளித்துக் கொண்டு, "மீனா! அழாதே, அம்மா! இப்பொழுது என்ன குடி முழுகிப் போயிற்று? நாளைக்குத் தானாக அவனே உன் கால் அடியில் விழுந்து மன்னிப்புக் கோரும்படி செய்யா விட்டால் நான் ரங்கசாமி அல்ல. கவலைப்படாதே" என்று ஆறுதல் கூறினான்.

மெதுவாக மீனா தலையைத் தூக்கினாள். "அண்ணா! இம்மாதிரிக் கஷ்டம் யாருக் காவது வருமா? இதற்கெல்லாம் நீதானே அண்ணா காரணம்?" என்றாள்.

ரங்கசாமி வாயைத் திறக்கவில்லை. எல்லா வற்றிற்கும் காரணம் அவன்தான் என்று அவனுக்குத் தெரியும். மின்னல் போல் பழைய சம்பவங்கள் அவ்வளவும் அவன் ஞாபகத்துக்கு வந்தன.

2

ரங்கசாமியும் கோபாலனும் கலா சாலை நண்பர்கள். இரண்டு பேரும் படிப்பில் கெட்டிக்காரர்கள். இரண்டு பேரும் ஏழைகள். மற்றப்படி, ரங்கசாமிக்கும் கோபாலனுக்கும் குணத்தில் எவ்வளவோ வித்தியாசம் இருந்தது. கோபாலன் முன் கோபக்காரன். ரங்கசாமியோ மகா சாது.

ஒருநாள் ரங்கசாமி தன் சிநேகிதன் வீட் டுக்குப் போனான். அங்கே அவன் தங்கை

மைதிலியைப் பார்த்தான். இதற்குப் பிறகு, அவர்கள் பரம சிநேகம் கொள்ளத் தொடங்கினார்கள். இதன் பயனாக, ரங்கசாமி மைதிலியைக் கல்யாணம் செய்து கொள்வதும், கோபாலன், ரங்கசாமியின் சகோதரி மீனாவைக் கலியாணம் செய்து கொள்வதும் சாத்தியமாயிற்று.

இரு தம்பதிகளும் தங்கள் மண வாழ்க்கையை எவ்வளவோ சந்தோஷமாக ஆரம்பித்தார்கள். கோபாலன் ஒரு பங்கு தாருக் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சேர்ந்தான். ரங்கசாமி கோயமுத்தூரில் ஒரு மில்லில் சேர்ந்து வேலை பார்த்து வந்தான்.

ஆனந்தமயமான நாட்கள் போவதே தெரியாமல் பறந்து கொண்டிருந்தன. ரங்கசாமி தன் உழைப்பினாலும் குண விசேஷத்தினாலும் கொஞ்சம் கொஞ்சமாக முன்னுக்கு வந்து மானேஜர் பதவியை அடைந்தான். செல்வத்தில் கொழித்துக் கொண்டிருந்த ரங்கசாமி மைதிலிக்கு வைர நகைகளாக வைத்து இழைத்துவிட்டான். தங்கைக்கும் மாப்பிள்ளைக்கும் செய்வதற்குக் கேட்கவா வேண்டும்? மீனா பணத்திற்காக எழுதிய போதெல்லாம், “இல்லை” என்று சொல்லாமல் அவன் பணம் அனுப்பி வந்தான்.

ஒரு நாள் மீனாவிடமிருந்து எதிர்பாராத கடிதம் வந்தது. அதைப் படித்ததும், அவன் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டது போலிருந்தது. அந்தக் கடிதத்தில் மீனா அத்தனை நாளாய் மனத்தில் வைத்திருந்த துக்கத்தைச் சொல்லிக் கதறியிருந்தாள்.

கோபாலன் பங்குகளில் பணத்தைப் போட்டு, ஏராளமான நஷ்டம் அடைந்து வருவதாகவும், அவள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் மேலும் மேலும் பங்கு வாங்கி வருவதாகவும் எழுதியிருந்தாள். மீனாவின் நகைகள் எல்லாம் அடகு வைத்தாகி விட்டது. ரங்கசாமி அவ்வளவு நாளாய் அனுப்பின பணம் எல்லாவற்றையும் பங்கில் சூதாடித் தோற்றுவிட்டது. மேலும், அண்ணாவிடம் பணம் கேட்கும்படி அவள் கணவன் உபத்திரவப்படுத்த ஆரம்பித்தான். மீனா அதற்குச் சம்மதிக்காமல் போகவே, அவளைக் கோபாலன் பலவிதத்திலும் ஹிம்சை செய்ய ஆரம்பித்தான்.

தங்கையின் கடிதத்தில் கண்டிருந்த இந்த விஷயங்களைப் படித்ததும் ரங்கசாமிக்குத் தலை சுழன்றது. அவனுக்கு என்ன



செய்வது என்றே புரியவில்லை. வெகுநேரம் யோசனை செய்துவிட்டுக் கடைசியில் கோபாலனுக்குப் பின்வரும் கடிதம் எழுதினான்.

“நீ நடந்து கொள்வது கொஞ்சங்கூடச் சரியாயில்லை. என்ன தைரியத்தை வைத்துக்கொண்டு இப்படி மீனாவைக் கஷ்டப் படுத்துகிறாய் என்பது தெரியவில்லை. உன் தங்கை என் நிழலில் இப்பொழுது இருக்கிறாள் என்பதை மறந்து விடாதே!”

இதற்குக் கோபாலனிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. “நிலைமை சகிக்க முடியவில்லை. புறப்பட்டு வருகிறேன்” என்று மீனா கடிதம் எழுதிப் போட்டு விட்டுக் கோயமுத்தூருக்கு வந்து விட்டாள்.

3

கட்டிலில் சாய்ந்தபடி தேம்பித் தேம்பி அழுதுகொண்டே, “நீதானே அண்ணா இவ்வளவுக்கும் காரணம்?” என்று மீனா சொன்னபோதுதான், ரங்கசாமிக்கு இத்தனை சம்பவங்களும் ஞாபகம் வந்தன. துக்கம் அவன் நெஞ்சைப் பிசைந்துகொண்டிருந்த போதிலும், அவனையு மறியாமல்

தேவன் குழந்தையின் உள்ளத்தைத் தம்பால் இழுத்து விட்டார்!

மகாராஜா ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே ரங்கநாயகி நீரில் இறங்கிவிட்டாள். உடனே கரையில் அவள் நின்றிருந்த இடத்தில், அவளைப் போன்ற சிலை யொன்று தோன்றிற்று.

விடியற்காலை, ஆராவமுதம் கனவிலே தோன்றினர் மகா மல்ல ராஜா. "அன்பரே! உங்கள் மகள் மீரா போன்ற பக்தை. அவளை எம்பெருமான் தடுத்தாட் கொண்டு விட்டான். அவளுடைய திருவுருவைப் பார்க்க வேண்டுமாகில் உடனே சமுத்திரக் கரைக்குப் போம். அங்கே கையிலே கண்ணனின் அழகுப் பொம்மையுடன் நின்றிருக்கிறாள் உம்முடைய மகள்...." என்று சொல்லி மறைந்தார் அவர்.

ஆராவமுதம் திடுக்கிட்டு விழித்துப் பக்கத்தில் பார்த்தார். குழந்தையைக் காணவில்லை.

"ரங்கநாயகி! ரங்கநாயகி!" என்று இரைந்து அழைத்தபடி வீட்டிற்கு வெளியே ஓடி வந்தார் அவர்.

சிறிது நேரத்தில் கும்பல் கூடிவிட்டது. தான் கண்ட கனவை அவர் சொன்ன பொழுது, அதை ஒருவரும் நம்பவில்லை. இருப்பினும் சிலர் அவருடன் சமுத்திரக் கரைக்கு ஓடினர்.

அங்கே புன்னகையுடன், உயிருள்ளதோ என்று சந்தேகப்படக்கூடிய தாய் நின்றிருந்தது ரங்கநாயகியின் சிலை.

"ஐயோ, ரங்கநாயகி! இதுவென்ன, கலி காலத்து அதிசயம்? என்னால் நம்ப முடிய வில்லையே" என்று சிலையைக் கட்டிக்கொண்டு அழுதார் ஆராவமுதம்.

மகளைப் பிரிந்த துக்கத்தில் சிறிது நாட்களிலேயே உலகத்தை நீத்தார் ஆராவமுதம்.

ரங்கநாயகி கண்ணன் திருவடியை அடைந்த பௌர்ணமிக்கு அடுத்த பௌர்ணமி. சமுத்திரம் என்றும் இராத வண்ணமாகப் பொங்கி எழுந்தது. ரங்கநாயகியின் சிலையை மண் மூடிற்று. இந்தக் கலிகாலத்து அதிசயக் கதையும், காளடைவில் ஒவ்வொருவர் மனதினின்றும் மறைந்து போய்விட்டது.

* * *

கதையை முடித்தார் என் நண்பர். படகுக்காரனும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுப் பழையபடித் தன் பாட்டை விட்ட இடத்தில் தொடங்கினன்.

கர்முர்



ஒட்டே நேரிலே சொல்லி உனக்குன்னு ஒரு சின்ன யானை பண்ணித் தரச் சொல்றேன்' என்று உரக்கச் சமாதானம் பண்ணிக் கொண்டிருந்தாள். ராஜா அந்த வீட்டை நன்றாகப் பார்த்து வைத்துக்கொண்டு அங்கிருந்து போய் விட்டார்.

மறுநாள் எழுந்ததும், முதல் காரியமாகத் தம்முடன் அழைத்து வந்திருந்த வேலைக்காரனைக் கூப்பிட்டு நல்ல கருங்கல்லாக ஒன்று கொண்டுவரச் சொன்னார். ராஜா அன்றைய சாயந்திரம் வரை சிரமப்பட்டு அந்தக் கல்லிலிருந்து ஒரு அழகான யானையைச் செதுக்கினார். அதை எடுத்துக்கொண்டு முதல் நாள் ராத்திரி குழந்தை அழுது கொண்டிருந்த வீட்டுக்குப் போனார். ஆனால் அவர் போன சமயம் வீட்டில் எல்லோரும் குய்யோ, முறையோ வென்று அலறி அழுது கொண்டிருந்தார்கள். ராஜா என்ன சமாசாரம் என்று விசாரித்தபொழுது, அந்த வீட்டுக் குழந்தை செத்துப் போய் விட்டது என்று தெரியவந்தது. ராஜாவுக்கு அதைக் கேட்டதும் என்னமோ போல் ஆகிவிட்டது. தம் கையிலிருந்த யானையைத் தூர விட்டெறிந்தார். அந்த யானை பஞ்சபாண்டவர்கள் ரதத்தண்டை வந்து விழுந்தது. அப்புறம் அந்த யானை வளர்ந்துகொண்டே வந்து கடைசியில் இப்போது இருக்கிற அளவுக்கு வந்திருக்கிறது. இன்னும் ஆயிரம் வருஷம் போனால் அது இன்னும் பெரியதாகிக் கடைசியில் பறந்தே போய்விடுமாம்" என்று சொல்லித் தம் கற்பனைக் கதையை முடித்தார் ஆராவமுதம்.

அந்தக் கதையை ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்த குழந்தை அதை உண்மையென்றே நம்பிவிட்டது.

நாட்கள் சென்றன. தகப்பனார் தாம் சொன்ன கதையை மறந்துவிட்டார். ஆனால் குழந்தை ரங்கநாயகி அதை மறக்கவில்லை. அவள் மனதிலே "மகா மல்ல ராஜாவைக் கேட்டு ஒரு அழகான கிருஷ்ணன் பொம்மை வாங்கிக்கொள்ள வேண்டும்" என்ற எண்ணம் தினை தினை வளர்ந்து கொண்டு வந்தது.

"மகா மல்ல ராஜாதான் செத்துப் போய் விட்டாரென்று அப்பா சொல்றாரே!" என்று சில சமயம் எண்ணுவாள் அவள்.

ஆனால் "கடவுள் பக்தர்களுக்குப் பிரசன்னமாவாரென்று அப்பா சொல்றாரே! அப்படி ஏன் மகா மல்ல ராஜாவும் ஆகமாட்டார்? ராஜாக்கள் தான் கடவுள் அம்சமாயிற்றே" என்று தேற்றிக் கொள்ளுவாள் அவள்.

அவள் மனதிலே, "ஒரு நாள் ராஜா திடீரென்று பிரசன்னமாகி என்னை என்ன வேண்டுமென்று கேட்கப் போகிறார்! அப்பொழுது எனக்கு ஒரு சின்ன கிருஷ்ணன் பொம்மை வேண்டுமென்று நான் சொல்லப் போகிறேன்" என்ற நம்பிக்கை வேரூன்றிற்று.

ஒரு நாள் பௌர்ணமி இரவு. ஆராவமுதாச்சாரியார் குறட்டை விட்டபடித் தூங்கிக் கொண்டிருந்தார். அவர் பக்கத்திலே, தூக்கம் பிடிக்காமல் படுத்திருந்தாள் குழந்தை ரங்கநாயகி.

அப்பொழுது திடீரென்று ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. குழந்தையின் எதிரிலே மகாமல்ல ராஜா தோன்றினார்.

குழந்தை, "மகாராஜா!" என்று சந்தோஷத்துடன் கூவியபடி எழுந்தாள். ஆராவமுதம் கும்பகர்ணத் தூக்கத்திலிருந்தார். அவர் காதிலே குழந்தையின் மகிழ்ச்சிக் குரல் விழவேயில்லை.

"என்கூட வருகிறாயா அம்மா? உனக்கு வேண்டியதைத் தருகிறேன்" என்று சொன்னார் மகா மல்லர்.

"ஊம்..." என்று சம்மதித்தாள் குழந்தை.

மகா மல்லர் குழந்தையைப் பிடித்து அழைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினார். 'ஓ' வென்று கொந்தளித்துக் கொண்டிருந்தது சமுத்திரம். குழந்தை அதைக் கண்டு கொஞ்சம் பயப்பட்டாள்.

"குழந்தை! உனக்குக் கிருஷ்ணன் பொம்மைதானே வேண்டும்? அல்லது அவரையே நேரில் பார்க்க வேணுமா?" என்று கேட்டார் மகாராஜா.

"பொம்மையும் வேணும்; அத்துடன் கிருஷ்ணனையும் பார்க்கணும்" என்றாள் குழந்தை.

தினம் தினம் கிருஷ்ணன் பொம்மையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்த குழந்தை ரங்கநாயகி, கிருஷ்ண பக்தையாகி விட்டிருந்ததில் ஆச்சரியமெதுவுமில்லை யல்லவா?

மகாராஜா சமுத்திரத்தை நோக்கி மண்டியிட்டார். சமுத்திரத்தின் நீரிலே குழலோசை கேட்டது! ஓசையைத் தொடர்ந்து வந்தது கிருஷ்ணன் திருவுருவம்! இன்ப கானம் இசைத்த

அதிசயக் கதை

டி. ஜி. ஸ்ரீநிவாஸன்

மகாபலி புரத்தினின்றும் பத்து மைல்கள் தூரத்திலிருக்கும் திருவிடவெந்தை என்பது ஓர் அழகான கிராமம். ஒரு சமயம் நண்பரொருவருடன் மகாபலிபுரம் பார்க்கச் சென்றிருந்த நான், அவருடைய பலவந்தத்தின் பேரிலே திருவிடவெந்தைக்கும் புறப்பட வேண்டியதாயிற்று:

இரவு பத்து மணி. மாசி மாதத்துப் பௌர்ணமி நிலவு. தண்ணீரைக் கிழித்தபடி, 'சள சள' வென்ற சத்தத்துடன் போய்க்கொண்டிருந்தது எங்கள் படகு. படகுக்காரன் ஏதோ கிராமப் பாட்டின் அடியை மெல்லிய குரலில் இழுத்துக் கொண்டிருந்தான்.

கொஞ்ச தூரம் வழக்கத்திற்கு விரோதமாக மௌனம் சாதித்தபடி வந்த என் நண்பர் திடீரென்று, "நான் ஒரு கதை சொன்னால் கேட்கத் தயாராயிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"ஊம், கதையைத் தொடங்குங்கள்" என்றேன் நான்.

படகுக்காரன் காதிலே நாங்கள் பேசிக்கொண்டது விழுந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவன் பாடுவதை நிறுத்தி எங்கள் பக்கமாக நகர்ந்து உட்கார்ந்தான்.

"இது இன்றைக்குச் சரியாக நூற்றிருபது வருடங்களுக்கு முன்னால் நடந்தது" என்று தொடங்கினார் என் நண்பர்.

*　　　*　　　*

கார்த்திகை மாதத்தில் ஒரு நாள். இருட்டிவிட்டது. மகாபலிபுரம் கோயில் பட்டாசாரியார்களுள் ஒருவரான ஆராவமுதாச்சாரி தம் வீட்டுத் திண்ணையி லுட்கார்ந்து, மகள் ரங்கநாயகிக்குப் பழைய கால அரசர்களைப் பற்றிய கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஏனப்பா! அந்தப் பஞ்சபாண்டவர் ரதத்தண்டை ஒரு பெரிய கல் யானை யிருக்கே, அது யாரப்பா செய்தது?" என்று கேட்டாள் ரங்கநாயகி.

"அதுதான் சொன்னேனே, அம்மா! அந்த மகாமல்ல ராஜா இருந்தாரே, அவரேதான் செய்தார். அதுவும் தன் கையாலேயே...." என்றார் ஆராவமுதம்.

"எதுக்காக அப்பா அவரே செய்தார்? அவருக்கு ஆட்கள் இல்லையோ?" என்று கேட்டாள் குழந்தை.

"இருந்தார்கள்; இந்தக் கதையைக் கேளேன்: அந்த ராஜா ஒரு நாள் இந்த ஊருக்கு மாறுவேஷத்திலே வந்திருந்தார். அன்றைய ராத்திரி வீட்டுக்கு வீடாக ஒளிந்து ஒளிந்துபோய் ஜனங்கள் தம்மைப்பற்றி ஏதாவது சொல்லிக் கொள்கிறார்களா என்று ஒட்டுக் கேட்டார். வீட்டு வாசலிலே வந்ததும் ராஜா திடுக்கிட்டுப் போய்விட்டார். ஏன் தெரியுமா? அந்த வீட்டிலேயிருந்து ஒரு குழந்தை 'எனக்கு யானை வேணும், யானை வேணும்' என்று அழுது கொண்டிருந்தது. அதன் அம்மா, 'அழாதேம்மா! மகாமல்ல ராஜா அடுத்த தடவை ஊருக்கு வரட்டும். அவர்





"மனிதர்கள் நம்மை நடத்தும் கொடுமைக்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்?" என்றது.

பசு, எருமை, குதிரை, கரடி முதலிய சகலமான மிருகங்களும் மனிதர்களிடம் அகப்பட்டுக் கொண்டு படும் கஷ்டங்களைச் சொல்லி முடித்தன.

கடைசியாகக் கரடியார் எழுந்திருந்து, "என்னை இந்த மனிதர்கள் ஏசுவது பொறுக்கவே முடியவில்லை. 'பூஜை வேளையில் கரடி வந்த மாதிரி' என்று அடிக்கடி உபமானம் சொல்கிறார்களே, நான் எந்தப் பூஜையில் வந்து புகுந்தேனும்? யானையாராவது பூசை நடக்கும் இடத்திற்குப் போகிறார். நான் அந்தப் பக்கம் எப்பொழுதாவது காலடி எடுத்து வைத்திருக்கிறேனா?" என்றது.

உடனே சிங்க ராஜன் கனைத்துக் கொண்டு எழுந்து நின்று பேச ஆரம்பித்தது. "தோழர்களே! மனிதர்கள் நமக்கு எவ்வளவு தான் கொடுமை செய்த போதிலும் அவர்களை நாம் முற்றிலும் வெறுக்கக் காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. மனிதர்கள் எல்லோருமே நம் வர்க்கத்தினரை அவர்களோடு சேர்த்தேதான் பேசுகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் குழந்தையைக் கொஞ்சும் பொழுது 'அச்சு நாயே! அட கழுதை!' என்று கொஞ்சலாகவும் சந்தோஷமாகவும் கூப்பிடுகிறார்களல்லவா? அந்தச் சமயம் கழுதையும் நாயும் மட்டமாக அவர்களுக்குத் தோன்றுவது இல்லையல்லவா? அதே வார்த்தையைக் கோபத்தில் பெரிய குரலில் 'நாயே! வெளியில் போடா! சீ நாயே! என்னோடு பேசாதே' என்கிறார்கள். 'அது கிடக்கு கழுதை!' என்றும் சொல்கிறார்கள். சாதுவான பெண்களைப் பசுமாதிரி குணம் என்றும், நன்றாக வேலை செய்தால் மாடுபோல் உழைக்கிறான் என்றும் சொல்கிறார்கள். நல்ல பலிசாலியை, ஊக்கம் உள்ளவனைச் சிங்கம் மாதிரி இருக்கிறான் என்று சொல்கிறார்கள்.

"ஆகவே, மனிதர்கள் தங்கள் சுகத்திலும், துக்கத்திலும், சந்தோஷத்திலும், கோபத்திலும்கூட நம் ஞாபகமாகவே இருக்கிறார்களென்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா? ஆகையால் அவர்கள் நம் தோழர்கள் தான்."

"அது கிடக்கட்டும்! மனிதர்கள் சண்டைபோட்டுக் கொள்ளும்போது, 'மிருகத்தனமாயிராதே!' என்கிறார்களே, அது நம் வர்க்கத்தை அவமதிப்பதாகாதா?" என்றது நரியார்.

"நாம் சண்டை போடும் போது வேண்டுமானால், 'மனிதத்தனமாய் இராதே!' என்று பதிலுக்குச்சொல்லி விட்டால் போச்சு. மனிதர்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் ஏசிக் கொள்கிறார்கள்; அப்படியும் அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள். அது மாதிரியே நமக்கும் மனிதர்களுக்கும் எவ்வளவு சண்டை இருந்தாலும் மனிதர்களும் மிருகங்களும் ஒன்றாயிருக்க முடியும்" என்று சிங்கராஜன் கூறி முடித்தது.



காட்டில் ஒரு கூட்டம்



ஜனககுமாரி

ஒரு நாள் காட்டில் உள்ள எல்லா மிருகங்களையும் அன்றையக் கூட்டத்துக்கு வரும்படி சிங்கம் தமுக்குப் போட்டுத் தெரிவித்தது. சிங்கராஜன் உத்தரவுப்படி புலி, யானை, ஒட்டகை, கரடி, நரி, பசு, எருமை, குதிரை, கழுதை, குரங்கு முதலிய சகல மிருகங்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து கூடி விட்டன. சிங்கமும் அவ்விடம் வந்து மேடை மீது நின்று பேச ஆரம்பித்தது.



"சகோதர சகோதரிகளே! நான் கேட்கும் விஷயத்திற்குப் பதில் சொல்லும்படியாக உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். மனிதர்கள் மிருகம் என்று நம்மைக் கேவலமாகச் சொல்வதாகவும், அதனால் நம் பிரஜைகள் மிகவும் வருத்தம் அடைந்திருப்பதாகவும் கேள்விப் படுகிறேன். "இது சம்பந்தமாக ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்ள ஆவலாயிருக்கிறேன். முதலில் பெரியவரான யானை பேசட்டும்!" என்றது.

யானை எழுந்து பின் வருமாறு பேசிற்று:—"சிம்மராஜனே! மனிதர்கள் நம்மைக் கண்டு பயப்படுவது போல் பாசாங்கு செய்கிறார்கள் என்றே நான் எண்ணுகிறேன். அவர்களிடம் நாம் அனைவரும்தான் அகப்பட்டுக் கஷ்டப்படுகிறோம். மிருகராஜனே, மிருகத்திற்கு ராஜாவான உங்களையும், உருவத்தில் பெரியவனான என்னையுமே சர்க்கஸில் அவர்களுக்குத் தோன்றியபடி ஆட்டி வைக்கிறார்களல்லவா? அவர்கள் நம்மை நடத்துவதை எங்களைக் கேட்டுத்தானா நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்? மனிதர்களும் நாமும் ஜன்ம விரோதிகள். இதில் சந்தேகத்திற்கே இடம் இல்லை."

இரண்டாவதாகப் புலி பேச ஆரம்பித்தது: "மகாராஜனே! என்னையும் ஆட்டுக் குட்டியையும் சர்க்கஸில் விளையாடச் சொல்லுகிறார்களே? ஆட்டைத் தின்னாமல் நான் விளையாடும் கஷ்டம் ஒன்றே போதாதா?



காலக்ஷேபம்

சிக்கனம்!

மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்யப்போகும் தனவந்தரைத் தற்செயலாகப் பார்த்த அவரது நண்பர், "மூன்றும் வகுப்பிலா பிரயாணஞ் செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

தனவந்தர் :—என்ன செய்வது? நாலாம் வகுப்புத்தான் இல்லையே!

—பி. ஜோஸப்.

●

சங்கடம்

பையன் :—ஏனப்பா, 'மணம்', 'விவாகம்', 'கல்யாணம்' இவை மூன்றுக்கும் என்ன வித்தியாசம்?

தந்தை (கோபத்தில்) :—எல்லாம் ஒரே சங்கடத்தைத்தான் குறிக்கின்றன!.......போடா!

என். நாராயணன்.

●

போட்டுப் பார்க்கட்டும்

ஒரு ஊரில் இருந்த ஒரு பட்டாதாருடைய நிலத்தைக் கிஸ்தி செலுத்தாததற்காக ஏலம் போட்டார்கள். இதைப் பற்றி அவருடைய நண்பர்கள் சிலர் அவரிடம் வந்து, "நிலத்தை ஏலம் போடுவதற்கு எடுத்துக் கொண்டு விட்டார்கள்போல் இருக்கிறதே?" என்றார்கள்.

பட்டாதார்:— போடட்டும்; மகாராஜன்களாய்ப் போடட்டும்! நெல் சாகுபடி செய்து பார்த்தேன்; ஒன்றும் பிரயோசனமில்லை. ஏலமாவது போட்டுப் பார்க்கட்டுமே!

—வி. எஸ். கிருஷ்ணசாமி ராவ்.

●

வீட்டுக் கணக்கு

உபாத்தியாயர்:— நீ ஏன் வீட்டுக் கணக்குப் போட்டுக்கொண்டு வரவில்லை?

பையன்:— அடுத்தாத்து அம்பி கணக்கு நோட்டைக் காண்பிக்க மாட்டேன்னு சொல்லிவிட்டான், ஸார்!

—எஸ். பி. பாஸ்கரன்.

யார் திருடன்?

நியாயாதிபதி (கைதியைப்பார்த்து):- நீ திருடனென்று உன் முகம் கண்ணாடி போல் எடுத்துக் காட்டுகிறதே!

கைதி :—அப்படியானால் நான் திருடனல்ல; ஏனெனில், அதில் உங்கள் முகத்தைத்தானே நீங்கள் பார்க்கிறீர்கள்?

—கே. ராஜேந்தர்.

●

மறதி

மனைவி :— இதென்ன அநியாயம்? உங்களுக்குப் பைத்தியமா பிடித்து விட்டது? இப்படி எதற்காகத் தலை கீழாக நிற்கிறீர்கள்?

கணவன் :— பேசாதிரு! மறந்து போய் 'பாட்டி'லைக் குலுக்காமலே மருந்து சாப்பிட்டு விட்டேன். டாக்டருக்குத் தெரிந்தால் கோபித்துக் கொள்வார். இப்படிச் செய்தாவது வயிற்றுக்குள் இருக்கும் மருந்தைக் குலுக்கிக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன்! —வெ. கோ. சௌரிராஜுலு.

●

காரணம்

கணவனும் மனைவியும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

மத்தியஸ்தர் :—ஏன் ஸார் இப்படிச் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்?



ஒருவருக் கொருவர் அடங்கிப் போகக் கூடாதோ?

கணவன் :—யாருக்கு யார் அடங்கிப் போகிறது என்பதற்காகத்தான் இப்பொழுது சண்டை! —எம். ஸ்ரீராமன்.

காரியதரிசி பேசினால்....

பகீரதன்

சாம்பமூர்த்தி சாதாரண மனிதர். அவருக்கு இருந்ததோ ஒரே ஒரு குழந்தை. அதற்கு உடம்புக்கு வந்து இருபது நாட்களுக்கு மேலாகிவிட்டது. எத்தனையோ பேரிடத்தில் வைத்தியம் செய்து பார்த்தும் குணமடையவில்லை. அந்தச் சமயத்தில் அங்கே வந்த அவருடைய நண்பர் நமசிவாயம், "டாக்டர் தாமோதரனிடம் காண்பிப்பது தானே. அவர்தான் குழந்தை வைத்தியத்தில் பேர் போனவர் அவர் டெலிபோன் நம்பர் 8965. உடனே கூப்பிட்டுக் காண்பியுங்கள்" என்றார்.

சாம்பமூர்த்தி தம் வீட்டுக்குச் சற்றுத் தூரத்திலிருந்த பங்களா ஒன்றிற்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடினார். அவரைப் பின் தொடர்ந்து அவருடைய நண்பர் நமசிவாயமும் ஓடினார். பங்களாவின் சொந்தக்காரர் அனுமதி பெற்று, சாம்பமூர்த்தி டாக்டரை டெலிபோனில் கூப்பிட்டார்.

பதிலுக்கு வழக்கம் போல் டாக்டர் பேசவில்லை. அவருடைய 'கம்பௌண்டர்' பேசினார். "ஹல்லோ! யாரது? டாக்டர் இப்பொழுது 'ரெஸ்ட்'டில் இருக்கிறார். இன்னும் இரண்டு மணி நேரம் கழித்து வேண்டுமானால் அவரிடம் சொல்லுகிறேன். உங்கள் விலாசம் என்ன?"

சாம்பமூர்த்தி விலாசத்தைச் சொல்லவில்லை. அவருக்குத் தான் கூப்பிட்டதும் போனில்கூடப் பேசாத டாக்டரை என்ன செய்தால் தேவலை என்று தோன்றிற்று.

இந்தச் சமயத்தில் அவருடைய நண்பர் நமசிவாயத்திற்கு ஒரு யோசனை தோன்றிற்று. "சாதாரண சாம்பமூர்த்தி கூப்பிடுவதைவிட, ஸர் சாம்பமூர்த்தியின் காரியதரிசி கூப்பிட்டால் தேவலை போலிருக்கிறதே!" என்று அவர் நினைத்தார். எனவே, அவர் சாம்பமூர்த்தியின் கையிலிருந்த ரிஸீவரை வாங்கிக் கொண்டு, "ஹல்லோ! நான்தான் ஸர் சாம்பமூர்த்தியின் காரியதரிசி ......"

ஸர் சாம்பமூர்த்தியின் காரியதரிசி என்றதும் கம்பௌண்டர், "கொஞ்சம் பொறுங்கள், ஸார்! இதோ டாக்டரைக் கூப்பிடுகிறேன்" என்றான்.



சிறிது நேரத்திற்குப் பிறகு, "ஹல்லோ! யாரது? ஸர் அவர்கள் காரியதரிசியா! நான்தான் டாக்டர் தாமோதரம் பேசுகிறேன்..." என்று டாக்டரே வந்து பேசினார். சாம்பமூர்த்திக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இப்படியும் உலகம் உண்டா என்று வியந்தார்.

"ஆமாம்; உடனே ......" என்று ஆரம்பித்தார் நமசிவாயம்.

"அதற்கென்ன ஸார்! இதோ வந்துவிட்டேன் ......" என்று டாக்டர் உடனே பேச்சை முடித்துக் கொண்டு சாம்பமூர்த்தியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்!

மோட்டார் எங்கே?

லோமாஸ்

இன்ஸ்பெக்டர் அனந்தசயனமும் மோட்டார் கம்பெனி டைரக்டர் ராமநாதனும் ஆப்த நண்பர்கள்.

இன்ஸ்பெக்டர் அன்று ஒரு அவசரக் கேஸ் விஷயமாக அடையாறு போகவேண்டியிருந்தது.

"மிஸ்டர் ராமநாதன், உங்கள் கம்பெனிக் காரில் ஒன்றைக் கொடுங்கள்! ஒரு கேஸ் விஷயமாக அடையாறு போகவேண்டியிருக்கிறது. அவசரம்!" என்றார் அனந்தசயனம்.



"ஆகா! பேஷாய் எடுத்துக்கொண்டு போங்கள்! கொஞ்சம் என்ன? நிறைய எடுத்துக் கொள்ளுங்களேன்!" என்று கூறி ஒரு காரை அனுப்பினான் ராமநாதன்.

இன்ஸ்பெக்டர் போனதும் ராமநாதன் சாப்பிடும் நாழிகையாகிவிட்டபடியால் வீட்டுக்குப் போய்விட்டான். இன்ஸ்பெக்டருக்குக் கார் கொடுத்த சமாசாரத்தைக் கம்பெனி மானேஜரிடம் சொல்ல மறந்துவிட்டான்.

மானேஜர் ஸ்டாக்கைப் பரிசோதனை செய்த போது ஒரு கார் குறைவாக இருந்தது. விவரம் தெரியவில்லை. பின்ன சமாசாரம் என்ன, மூலை முடுக்குகளில் எல்லாம் தேடுவதற்கு? ஒரு விநாடியில் போலீஸாருக்குச் சமாசாரம் பறந்தது. போலீஸ் இலாகாவும் பரபரப்புடன் காரைத் தேடுவதில் முனைந்தது.

அடையாற்றிலிருந்த இன்ஸ்பெக்டர் அனந்தசயனத்துக்கு இந்தச் சமாசாரம் டெலிபோன் மூலம் எட்டியது. அவர் விசேஷ போலீஸாருக்கும் அந்தக் காரைத் தேடும்படி உத்தரவளித்தார்.

இரவு ஏழு மணியாகியும் காரைப் பற்றிய சமாசாரம் ஒன்றும் தெரியவில்லை. டைரக்டர் ராமநாதனும் அன்று பகலுக்கு மேல் ஆபீஸுக்கு வராததால் அவர் கார் இரவல் கொடுத்த சமாசாரம் கம்பெனிக்குத் தெரிய இடமில்லாமற் போயிற்று. இன்ஸ்பெக்டர் அனந்தசயனம், காரை அடித்துக் கொண்டு போன பெரிய திருடன் யாராயிருப்பான் என்று யோசித்தார். தம்மிடமிருக்கும் போக்கிரிகளின் ஜாபிதாவை யெல்லாம் துருவினார். தண்டனைக்கை ஜாமீன் மேல் விடப்பட்டிருந்த ஒரு அயோக்கிய கோமணியின் மேல் அவருக்குச் சந்தேகம் விழுந்தது.

அப்பொழுது அவருக்கு இன்னொரு சந்தேகம் தோன்றியது. உடனே காணாமற் போன காரின் பெயர், நம்பர் முதலியவை கவனித்துப் பார்த்தார். மேலே இறங்கித் தாம் ஏறிக் கொண்டிருந்த காரைக் கவனித்தார். "என்ன ஆச்சரியம்! 'ப்ளிமத் — தெ. எம். டி. ஓ. 0006.' அதே நம்பர்தான்! இப்பொழுதுதான் அவருக்குக் காணாமற் போன கார் தம்மிடமே இருப்பது தெரிந்தது!

தில் குளிர்ந்த மேகங்கள் சகுனம் பார்த்து நின்றன.

"இன்று பெருங் காற்றுக்கும் மழைக்கும் அடிகோலாக வல்லவோ இருக்குது. நாளைக்குக் கிரகப்பிரவேசத்தை வச்சிக்கலாமே" என்று வள்ளியின் தகப்பன் சொன்னான். அவன் எதிரில் பாளையக்காரர் கம்பீரத் தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தார்.

"கூடவே கூடாது. மணக் கோலத்துடன் தம்பதிகள் இன்றே கிரகப் பிரவேசம் செய்வதுதான் எங்களுடைய பாரம்பரை ஆசாரம்" என்று பாளையக்காரர் உறுதியாகக் கூறிவிட்டார்.

"யாரைத் தேடிப் பிடித்தீர்கள், படகு ஓட்ட?" என்று கேட்டான் வள்ளியின் தகப்பன்.

"பரங்கிரிதான்!"

"அவன் உடம்புக்கு என்னமோ......" என்று ஏதோ சொல்ல வள்ளியின் தகப்பன் வாயெடுத்தான். பாளையக்காரர் நடுவே குறுக்கிட்டு, "அவன் நிலையில் துடுப்பைக் கையில் எடுக்கக்கூட முடியாதுதான். அது என்னவோ கொண்டு போவதாகச் சொல்லி விட்டான். எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது" என்றார்.

அதே சமயத்தில், "உல்லாசப் படகு தயாராகியிருக்கிறது; தங்கள் மகளைக் கூட்டி வரச் சொன்னாங்க" என்று பாளையக்காரரின் வேலையாள் வந்து சொன்னான்.

வெகு நாட்களாக நீர் ஸ்பரிசமே உணராத அந்த 'உல்லாசப் படகு' அன்னப் பட்சி போல் வெகு லாகவமாகச் சென்றுகொண்டிருந்தது. கனத்த முண்டாசாலும், கம்பளிப் போர்வையாலும் சுற்றப்பட்ட பரங்கிரியின் தேகம் வியாதியுடன் போரிட்டவாறே படகை நடத்திச் சென்றது. படகில் சென்ற தம்பதிகளிடமோ பேச்சில்லை.

ஏறக்குறையப் பாதி தூரம் சென்றதும் மழை பெய்ய சகுனம் பார்த்த வானம் ஒரேயடியாகப் பொழிய ஆரம்பித்தது.

ஜாஜ்ஜோதியாக பல விளக்குகள் நூதனப் பாதுகாப்புடன் செருகப்பட்டிருந்த போதிலும், அந்தச் சீறுகின்ற காற்றுடன் நெடுநேரம் போராடிய விளக்குகள் கடைசியில் அணைந்தன. படகின் மேல் விரிப்பையும் பொத்துக்கொண்டு வான தாரைகள் கொட்டின.

மங்கிய வெளிச்சத்தில் பரங்கிரிக்கு திசை தப்பவே, அந்தப் படகு திசை மாறி ஆற்றின் சுழல் பக்கமாகச் சென்றது.

பயங்கரச் சுழலில் படகு அகப்பட்டது. அடுத்த கணமே படகு கவிழ்ந்தது. மூன்று பேரும் சுழலில் அகப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் மாப்பிள்ளை தட்டுத் தடுமாறி எப்படியோ கரை வந்து சேர்ந்தார். வள்ளியையும் பரங்கிரி மூச்சுத் திணறக் கரை கொண்டு வந்து சேர்த்தான். வள்ளியைக் கரை சேர்த்ததுதான் தாமதம்; பரங்கிரி கீழே சாய்ந்தான். அடுத்த கணமே அவன் அமைதியற்ற ஆத்மா சாந்தியை அடைந்தது.

* * *

நாள் முழுதும் எலும்பொடிய உழைத்துவிட்டு மக்கள் அமைதிபெறும் அந்தி நேரங்களிலே, தாம்பிரபரணியின் தீரத்தில் படகு செலுத்தும் அவர்கள் — பரிசலோட்டிகள் — பரங்கிரியின் இனிய கீதத்தைக் கேட்பதாக இன்னும் சொல்லிக் கொள்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மையோ, யாருக்குத் தெரியும்?

★

பரிச்சயம்!

"உங்களைத்தான் எனக்கு ஐந்து வருஷமாகப் பரிச்சயமாச்சே. அவசரத்துக்கு ஒரு பத்து ரூபாய் கைமாத்தாகக் கொடுக்கப்படாதா?"

"முடியவே முடியாது!"

"ஏன்?"

"உங்களைத்தான் எனக்கு ஐந்து வருஷமாய்ப் பரிச்சயமாச்சே!"

★



"உனக்குச் சமாசாரம் தெரியுமா, கொழுந்தச்சி? நம்ம செங்கோனுந்து மக வள்ளி இருக்குதில்லே! அதுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தியா?" என்று மூக்கின்மேல் விரலை வைத்தாள் முதுமைப் பருவ மடைந்த ஒரு ஸ்திரீ.

"என்ன அதிஷ்டம் அம்பிட்டுக்கு?"

"நம்மப் பாளையக்காரரு மகன்தான் அதைக் கட்டிக்கணும்னு ஒத்தைக் காலிலே நிக்குதாம்."

"நிசமா?"

"பின்னே பொய்யா? கல்யாணத்துக்கு ஏற்பாடெல்லாம் கூட நடக்குதுங்கறேன்!"

"எப்போ கல்யாணம்?"

"இன்னும் ஒரு திங்க கிடக்குது."

தடாலென்ற சத்தம். ஸ்திரீகள் திடுக்கிட்டுப் பார்த்தனர். பரங்கிரி அதிர்ச்சியுடன் படகில் சாய்ந்திருந்தான் — சம்பாஷணையைக் கேட்டுத்தான். படகு கரை சமீபத்திலிருந்ததால் பிரயாணிகள் பிரயத்தனம் செய்து அவனைக் கரை சேர்த்தார்கள். அதிர்ச்சியில் விழுந்த பரங்கிரிக்கு வெகு நேரம் கழித்துத்தான் நினைவு வந்தது.

பரங்கிரி ஓடம் செலுத்துகையில் மயக்கம் போட்டு விழுந்ததும், அந்த அதிர்ச்சியில் உடம்பு அசௌக்கியமாகப் படுத்ததும் அந்தச் சிறு கிராமத்தில் பரவ எவ்வளவு நேரம் பிடிக்கும்? — வள்ளியின் செவிகளில் இந்தச் செய்தி விழுந்தபோது, அவள் உள்ளத்தையே குலுக்கிற்று. ஒருவேளை தன் தகப்பனாரின் ஏற்பாடு பரங்கிரியின் செவிக்கு எட்டியிருக்குமோ?

* * *

கிருஷ்ண பட்சத்து இரவு; வானம் மப்புப் போட்டிருந்தது. விண் மீன்கள் ஒன்றையும் காணோம். பரங்கிரியின் வீட்டுக் கதவை யாரோ இடிக்கவும், அவன் பாட்டி கதவைத் திறந்தாள்.

"யாரது?"

"நான்தான்!"

"வள்ளியா?"

"ஆமாம்."

அவள் உள்ளே செல்லவும் கதவு தாளிடப்பட்டது.

பரங்கிரி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். அவன் கண் விழிக்கும் மட்டும் வள்ளி அவனருகிலேயே உட்கார்ந்திருந்தாள்.

பரங்கிரி கண் விழித்ததும் அவன் கண்கள் வள்ளியை நோக்கின.

"நான் இனி அதிக நாட்கள் இருக்க மாட்டேன், வள்ளி!" என்று சொல்லி, அவள் கைகளைப் பற்றினான் பரங்கிரி.

வள்ளி மௌனமாக இருந்தாள். ஆனால் அவளுடைய கண்கள் மட்டும் கண்ணீரைக் கக்கின. அதைப் பார்த்துச் சகியாதவனாய் பரங்கிரி, "கவலைப்படாதே, வள்ளி! நீ பாளையக்காரர் மகனையே கல்யாணம் பண்ணிக்கோ. அது என்னுடைய கட்டளைன்னு எண்ணிக்கோ" என்றான்.

இப்படி அதிகார தோரணையில் உறுதியுடன் வெளிப்பட்ட அந்த வார்த்தைகளைக் கேட்டதும், "அதன் அர்த்தம்?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் வள்ளி.

"என்னை மறந்துடு என்பதுதான்!" என்று அமைதியுடன் சொன்னான் பரங்கிரி.

4

வள்ளி பரங்கிரியைச் சந்தித்துச் சென்று எட்டாம் நாள், அந்தச் சிற்றூர் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. அன்றுதான் வள்ளியின் திருமணம். பாளையக்காரர் மகனுக்கும் வள்ளிக்கும் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது.



அன்று சாயங்காலம்; அக்கரை தாண்டி தொலைதூரத்தில் கிரகப் பிரவேசத்திற்கு ஏற்பாடு வெகு துரிதமாக நடந்தது. சந்தியா வேளையும் கடந்து இருளும் கவிய ஆரம்பித்தது. ஏற்பாடுகள் பூராவும் முடியவில்லை. கருவானம் கட்டிக் கொண்டு மழையை பூமியில் கொட்டுவதற்கு மேல் வானத்

பாரேன். படிகம் மாதிரியில்லையா ?'' என்று வள்ளியிடமிருந்து கேள்வி பிறந்தது.

"ஆமாம், அதுலே யாரோ ஒருத்தரு முகங்கூடத் தெரியுதில்லே? அது யாரு முகம்?'' என்று பதில் கேள்வி கேட்டுக் கொண்டே நீரினிடை எட்டிப் பார்த்தான் பாக்கிரி. வள்ளியும் குனிந்து நீரைப் பார்த்தாள். தெள்ளிய நீரில் அவள் எழில் முகம் பிரதிபலித்தது.

அதைப் பார்த்ததும் பாக்கிரி அவளுடைய அழகில் வெருவாக ஈடுபட்டு, "வள்ளி! நீ இந்தத் தண்ணியிலேகூட எவ்வளவு அழகா யிருக்கே ?'' என்று கொஞ்சலோடு சொல்லி, அவளுடைய முகவாய்க்கட்டையைப் பிடிக்கப் போனான்.

"சே, இதென்ன, இது ?'' என்று வெடுக்கென்று முகத்தை ஒருபுறமாகத் திருப்பிக் கொண்டாள் அந்த அழகி. இவர்கள் காதலிடை எழுந்த ஊடலைச் சகிக்காமல் தானோ என்னவோ படகு வெகு வேகமாகக் கரையை நெருங்கியது.

கரையருகே வரவும், எதையோ நினைத்துக் கொண்டவள் போல, "பாக்கிரி! ஒண்ணு கேப்பேன், சொல்லுவியா ?'' என்று கேட்டாள் வள்ளி.

"என்ன, கேளேன்!'' என்று அவளருகில் நெருங்கி உட்கார்ந்தான் பாக்கிரி.

"உன் வீட்டிலே தண்ணியிலே போடாத ஒரு படகு வச்சிருக்கியே — ஆஹா! அது என்ன அழகு! அதை என்னத்துக்கு அப்படி வச்சிருக்கே? அதை எடுத்து ஆத்திலே விடறதுதானே ? எனக்கு அதிலே...'' என்று வெட்கத்துடன் மேலே சொல்லாமல் நிறுத்திவிட்டாள் வள்ளி. அப்பொழுது அவள் குரலில் தோன்றிய ஆர்வத்தைக் கவனித்த ஓடக்காரப் பாக்கிரி பதிலளிக்காமல் சிரித்தான்.

"என்ன சிரிக்கிறே? நான் சொல்றது உனக்குச் சிரிப்பா இருக்குதாக்கும்? உம், இருக்கும், இருக்கும்!''

"அந்தப் படகுதானே நம் உல்லாசப் படகு! இத்தனை நாளா புரியலியா ?'' என்று சொல்லிவிட்டுப் படகு கரையை நெருங்கி விடவே, பரிகாசத்துடன் துடுப்பை விட்டெறிந்தான் பாக்கிரி.

"இப்போ புரிஞ்சது!'' என்றாள் வள்ளி.

"என்ன புரிஞ்சது ?'' என்று கேட்டான் பாக்கிரி.

"சொல்றேன்'' என்று படகிலிருந்து குதித்து ஓடினாள் வள்ளி.

"எப்போ ?'' என்று கேட்டுக்கொண்டே பாக்கிரி அவளைப் பின் தொடர்ந்தான்.

"கல்யாணத்தின் போது!'' என்று சொல்லிக்கொண்டே ஓட்டம் பிடித்தாள் அந்தக் கைகாரச் சிறுக்கி.

3

தை மாதப் பிறப்பு. உத்தராயண புண்ணிய காலம். நதிக் கரையில் ஸ்நானத்திற்கு இந்த விசேஷ தினங்களில் 'ஜே ஜே' என்று கூட்டம் பெருகும். இந்த மாதிரியான காலங்களில் பாக்கிரிக்கு ரொக்க ஜாஸ்தி.

பாக்கிரி படகைத் தள்ளிக்கொண்டே போகும்பொழுது, நதிக் கரையில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தவர்களில் சிலர் பேசிக்கொண்டது அவன் காதில் விழுந்தது. அதைக் கேட்டதும் அவன் திடுக்கிட்டான்.



உல்லாசப் படகு

லக்ஷ்மி நாகராஜன்

தாம்பிரபரணியின் கரையோரம் ஒரு குக்கிராமம். இயற்கையன்னையின் மடியில் தவழும் குழந்தை போலிருந்தது அந்த ஊர். கரைக்கு எட்டினாற்போல் வரிசையாக எழெட்டு வீடுகள். அவற்றிற்கு நடுவில் உள்ள அழகான வீடுதான் பாக்கிரி பரிசலோட்டியின் வீடு.

அவனிடமிருந்த படகுகளில் இரண்டு உயர்தரமானவை; கண்யமான பெரிய மனிதர்களை இந்தப் படகுகளில் ஒன்று தாங்கிச் செல்லும். "பாக்கிரி! உல்லாசப் படகை அவிழ்த்துவிடு" என்று சகஜமாக அன்புடன் பேசும் பல ஜமீந்தார்களை அந்த உல்லாசப் படகு சுமந்திருக்கிறது. ஆனால், மற்றொரு படகை மாத்திரம் தண்ணீரில் போடாமலே சேர்த்தியான முறையில் நூதன அமைப்புகளுடன், வெளியில் எடுக்காமல் வைத்திருந்தான் பாக்கிரி. அடிக்கடி அந்தப் படகின் ஜோடனைகளைக் கண்டு அவன் தனக்குத்தானே வியந்துகொள்வது வழக்கம். அதைப் பற்றிய அவன் அந்தரங்க யோசனை என்னவோ?

2

வைகறை. ஜாஜ்வல்யமான கதிரவனின் கிரண ரேகைகள் நதிப் பரப்பின் மேல் பொற்பாளங்கள் போன்ற அலைகளை எழுப்பி விட்டன. வைகாசி மாதமாயிருந்தாலும் லேசாகப் பனி பெய்தது. அதன் திவலைகள் விருட்ச இலைகளினின்றும் வெண் முத்துக்களாக ஜ்வலித்துச் சூரிய ஒளியில் சொட்டி விழுந்து மறைந்தன.

"யாரது?" — இது நதிக்கரையை அடுத்து வந்த ஒரு இளம் பெண்ணின் குரல்.

"ஓஹோ! நீ வந்தாட்டியா? தண்ணி ஒரே சிலு சிலுப்பா இருக்குது" என்று சொல்லிக் கொண்டே நீர் மட்டத்திற்கு மேல் தலையைத் தூக்கினான் பாக்கிரி.

சிறு பெண் சிரித்துக் கொண்டே நின்றாள். பதினான்கு வயதிருக்கும். சிவந்த மேனி. ஸ்நானம் செய்வதற்காக அப்பொழுது அவள் விரித்த கேசம் வரி வரியாக லேசாகக் காற்றில் பறந்து முகத்தின் சோபையை அழகு படுத்தியது. யௌவனமும், பெண்மையழகும் அவள் தேகத்தைத் தழுவிக் கொண்டிருந்தது.

"என்னா! நான் சொல்றேன், நீ பேசாம நிக்கறே! வரியா, பிடிச்சி இருக்கட்டுமா?" என்று கேட்டுக்கொண்டே பாக்கிரி, தாவி ஓடிவந்து சிறுமியின் கைகளைப் பிடித்து நீரிலிழுத்து விட்டான். சிறு பெண் நாண மடைந்தவள்போல் கையை இழுத்த வண்ணம் சிரித்தாள்.

சூரியன் நன்றாக உதித்துவிட்டதற்கேற்ப, பொற்கோலத்திலே வெள்ளி மெருகு படர்ந்தது. படகு விடுவதற்குத் தயாராக வேண்டிய முஸ்தீப்புகளைச் செய்து கொண்டான் பாக்கிரி. சிறுமியும் அதற்குள் தன் குடத்தை நன்றாக விளக்கி அதில் நீர் நிரப்பிக் கொண்டாள். நனைந்த கேசத்தைத் துடைத்து முடித்துக் கொண்டாள். குடத்தைக் கையிலெடுத்துக் கொண்டு கிளம்பியதும், "வள்ளி! எங்கே ஓடறே? கொஞ்சம் இரு. படகுலே கொஞ்ச தூரம் போயிட்டு வரலாம்" என்றான் பாக்கிரி.

பதில் பேசாமலே சிறுமி அடிமேலடி வைத்து நகர்ந்தாள்.


"அட! நான் சொல்றேன், நீ கேக்காம போயிடுவியோ, பாக்கறேன்" என்று சொல்லிக் கொண்டே, பாக்கிரி அவள் போகும் திக்கைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

இந்தச் சொற்களைக் கேட்டதும் சிறுமி சட்டென்று திரும்பினாள். அவள் உதடுகளில் லேசாகப் புன்சிரிப்பு தவழவே, பாக்கிரிக்கு உற்சாகம் மேலிட்டது.

"இங்கே வா!" என்று கூப்பிட்டான்.

திரும்பி வந்த வள்ளி குடத்தைப் படகில் வைத்துத் தானும் ஏறிக் கொண்டாள். பாக்கிரி படகில் தாவிக் குதித்து எதிர் துடுப்பை எடுத்தான். இளம் வெயில்; காலை நேரம்; சிலுசிலுத்த காற்றினிடையே சொகுசாகப் படகு கிளம்பிற்று, ஒரு கீதத்துடன் — காதலினால் எழுந்த நாதத்துடன்.

"இதோ, பாரு! படகு எவ்வளவு அமைதியாப் போகுது? இந்தத் தண்ணியைப்



தாய்மார்களும், தந்தையர்களும் விரும்புவது

பெரீஸ் பிஸ்கோத்துகள்

ஏன்?

தங்கள் குழந்தைகளை போஷித்து வளர்க்கச் செய்யும் சிறந்த ஆகாரம் என்று அறிந்திருக்கிறார்களென்பதே!

PERRY & COMPANY. BISCUIT MANUFACTURERS. USILAMPATTI.

இப்போது ஊருக்கு எத்தனையோ தூரத்துக்கு அப்பால் தனியான காட்டு வழியில் போய்க் கொண்டிருந்தபோது, மேற் கூறிய மயானத்தின் ஞாபக மானது அவன் மனத்தில் பயங்கரத்தை உண்டு பண்ணிற்று. மயானத்தின் நினைவோடு பேய் பிசாசுகளின் நினைவும் சேர்ந்து வந்தது. மற்ற விஷயங்களில் மகா தைரியசாலியான பரஞ்சோதிக்குப் பேய் பிசாசு என்றால் பயம் அதிகம். "ஆகா! இன்றைக்கு இந்தக் காட்டு வழியில் இருட்டிய பிறகும் போகவேண்டுமே!" என்று நினைத்தபோது அவனுடைய நெஞ்சையும், வயிற்றையும் என்னவோ செய்தது. அதோ அந்த இரண்டு மலைகளும் கூடுகிற இடத்தில் அவன் அன்றிரவு தங்க வேண்டிய சத்திரம் இருப்பதாக அவன் அறிந்திருந்தான். அங்கே போய்ச் சேருவதற்கு இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலாகி விடலாம். நிலாவோ கிடையாது. முன்னிருட்டுக் காலம். "அடாடா! வழியிலே ஏன் இவ்வளவு தாமதித்தோம்?" என்று எண்ணியவனாய்ப் பரஞ்சோதி குதிரையை வேகமாய்ச் செலுத்த முயன்றான். ஆனாலும் பகலெல்லாம் பிரயாணம் செய்து களைத்திருந்த குதிரை எவ்வளவுதான் வேகமாய்ப் போய் விடும்?

அந்த மலைப் பிரதேசமோ நிர்மானுஷியமாயிருந்தது. பட்சிகள் மிருகங்கள்கூடக் காணப்படவில்லை. ஆம்; இருட்டிய பிறகு நரிகள் ஊளையிட ஆரம்பிக்கும்; பயங்கரத்தை அவை இன்னும் அதிகப்படுத்தும்.

நேற்றெல்லாம் பரஞ்சோதி நேர் வடக்கே சென்ற விசாலமான இராஜ பாட்டையில் பிரயாணம் செய்தான். அதில் ஜன நடமாட்டமும் குதிரைகளின் போக்கு வரவும் அதிகமாயிருந்தன. பாதையில் பல இடங்களில் அவன் நிறுத்தப்பட்டான். சக்கரவர்த்தி தந்திருந்த லாஞ்சனையை அடிக்கடி காட்டிக் கொண்டு அவன் போகவேண்டியிருந்தது.

இன்று காலையிலே இராஜபாட்டையைவிட்டு மலைப் பாதையில் திரும்பிய பிறகு அத்தகைய தொந்தரவு ஒன்றுமில்லை. ஆனால், இப்போது பரஞ்சோதிக்கு ஒரு பெரிய குதிரைப் படையே அந்த வழியில் வரக்கூடாதா என்று தோன்றியது.

ஆ! அது என்ன சத்தம்! குதிரைக் குளம்படியின் சத்தம் போலிருக்கிறதே! ஆம்; குதிரைதான்! பின்னால் வந்து கொண்டிருக்கிறது. வருகிறது யாராயிருக்கும்? யாராயிருந்த போதிலும் நல்லதுதான். இருட்டுக்கு வழித்துணையாயிருக்குமல்லவா?

வருகிறது ஒரே ஒரு குதிரையா? பல குதிரைகளா? பரஞ்சோதி தன் குதிரையை நிறுத்தி விட்டுக் காது கொடுத்துக் கேட்டான். ஒரு குதிரைதான் வருகிறது. ஆனால், சட்டென்று சத்தம் நின்றுவிட்டதே, ஏன்? ஒரு வேளை வெறும் பிரமைதானோ? யாராவது வரக்கூடாதா என்று தான் அடிக்கடி எண்ணியதின் பலனோ? —பரஞ்சோதி மேலே குதிரையைச் செலுத்தினான்.

மறுபடி பின்னால் குதிரை வரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் ஒன்றும் தெரியவில்லை. மலைப் பாதை வளைந்து வளைந்து சென்றபடியால் குதிரை சமீபத்தில் வந்தாலும் அதைப் பார்க்க முடியாது.

பரஞ்சோதி மறுபடியும் மேலே போனான். குதிரையும் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாகத் தெரிந்தது. பரஞ்சோதி தன் குதிரையை நிறுத்தினான். பின்னாலும் சத்தம் நின்றது. பரஞ்சோதி மறுபடி சென்றால் பின்னாலும் சத்தம் கேட்கத் தொடங்கியது.

இதற்குள்ளே சூரியன் அஸ்தமித்து நாலாபுறமும் இருள் சூழ ஆரம்பித்து விட்டது. பரஞ்சோதிக்குப் பீதி ஒரு பக்கம்; கோபம் ஒரு பக்கம்.

அதிக வளைவு இல்லாமல் பாதை நேராகச் சென்ற இடத்துக்கு வந்தபோது பரஞ்சோதி குதிரையைச் சற்று நேரம் வேகமாக விட்டுக் கொண்டு போய்ச் சட்டென்று நிறுத்தினான். அவன் திரும்பிப் பார்த்தபோது கொஞ்ச தூரத்தில் ஒரு குதிரை வந்து கொண்டிருந்தது. அதன்மேல் ஆளும் இருந்தான். பரஞ்சோதியின் குதிரை நின்றதும் அவனும் தன் குதிரையை நிறுத்தினான்.

பரஞ்சோதிக்குச் சொல்ல முடியாத கோபம் வந்தது. பீதியைவிடக் கோபம் அதிகமாயிற்று. சட்டென்று தன் குதிரையை லாகவமாய்த் திருப்பிப் பின்னால் நின்ற குதிரையை நோக்கி விரைவாகச் சென்றான். அப்பொழுது கையெழுத்து மறையும் நேரம்.

தாலே நாவில் ஜலம் சுரந்து தாகம் தீரும்.

ஆம்; வழிப் பிரயாணத்தின்போது தாகம் எடுத்துத் தவிப்பதென்பது அங்கெல்லாம் கிடையவே கிடையாது. அல்லியும், தாமரையும், செங்கழுநீரும், நீலோத்பலமும் பூத்த குளங்களுக்குக் கணக்கே யில்லை. ஆறுகளும் சிற்றாறுகளும் சின்னஞ் சிறு வாய்க்கால்களும் அடிக்கொரு தடவை வந்து கொண்டிருக்கும். இரு புறமும் பசுமையான செடி கொடிகள் படர்ந்த வாய்க்கால்களில் தண்ணீர் ஓடினால் அது ஒரு அழகு; தண்ணீர் இன்றி வாய்க்கால் வறண்டிருந்தால் அது இன்னொரு வகை அழகு. தண்ணீர் இல்லாத வாய்க்கால்களின் வழியாக நடப்பதைப் போன்ற இன்பம் வேறென்ன உண்டு? அப்படி நடக்கும்போது இரு கரைகளிலும் ஆங்காங்கே படர்ந்துள்ள காட்டு மல்லிகைக் கொடிகளில் பூத்த மலர்களி லிருந்து வரும் சுகந்த மணம் எவ்வளவு மனோகரமாயிருக்கும்?

ஆம்; அதற் கிணையான இன்பம் இன்னொன்று சொல்லவேண்டுமானால், உச்சி வேளையில் ஆலமரங்களும் வேப்ப மரங்களும் தழைந்து வளர்ந்த இராஜ பாட்டைகளில் நடப்பதுதான். அதுவும் இந்தப் பங்குனி மாதத்தில் சாலை ஓரத்து ஆலமரங்களிலே புதிய இளந் தளிர்கள் பளபள வென்று மின்னிக்கொண்டிருக்கும். வேப்ப மரங்கள் பூத்துக் குலுங்கும்! ஆகா! மாமரங்கள் புதிய தளிர் விடும் அழகைத்தான் என்னவென்று சொல்ல? ஒரு நாளைக்கு மாமரம் முழுதும் கரு நீல நிறம் பொருந்திய இளந்தளிர்களின் மயமா யிருக்கும். மறு நாளைக்குப் பார்த்தால், நீல நிறம் இளஞ் சென்னிறமாக மாறியிருக்கும். அதற்கு அடுத்த நாள் அவ்வளவு தளிர்களும் தங்க நிறம் பெற்று விளங்கும்.

இப்பேர்ப்பட்ட இயற்கை இன்பங்களை யெல்லாம் அளித்த இறைவனுடைய புகழை இன்னிசையிலே அமைத்து, மரக் கிளைகளில் உள்ள பூங்குயில்கள் இடைவிடாமல் பாடிக் கொண்டிருக்கும்.

திருச்செங்காட்டாங் குடியிலிருந்து காஞ்சிக்கு வரும் வழியில் இம்மாதிரி இன்பக் காட்சிகளை யெல்லாம் கண்டு வந்த பரஞ்சோதி அச்சமயம் அந்தக் காட்சிகளின் அழகையோ இன்பத்தையோ அவ்வளவாக அனுபவிக்கவில்லை. காஞ்சிக்குப் போய்ச் சேருவதிலேயே அவன் கவனமாக இருந்து விட்டான்.

இப்போது, எங்கே பார்த்தாலும் மொட்டைக் குன்றுகளே காணப்பட்ட பொட்டைப் பிரதேசத்தில், பசுமை என்பதையே காண முடியாத வறண்ட பாதையில் அவன் போய்க் கொண்டிருந்தபோதுதான், சோழ மண்டலத்து வயல்களும் தோப்புகளும், தொண்டை மண்டலத்து ஏரிகளும் காடுகளும் அவன் மனக்கண்ணின் முன்னால் அடிக்கடி தோன்றி இன்பமளித்தன.

* * *

மேற்குத் திசையில் மலைகளுக்குப் பின்னால் சூரியன் மறையத் தொடங்கிய போது, பரஞ்சோதி அந்த மலைப் பாதையில் ஒரு முடுக்கில் திரும்பினான். அன்றைக் கெல்லாம் மொட்டைப் புதர்களையும் கள்ளிச் செடிகளையும் தவிர வேறு எதையும் காணாமல் வந்த பரஞ்சோதிக்கு எதிரே, அப்போது ஓர் அபூர்வமான காட்சி தென்பட்டது. கண்ணுக் கெட்டிய தூரம் நெட்டையும் குட்டையுமான புரச மரங்கள். அவற்றில் அநேகமாக இலை யென்பதே இல்லாமல் ஒரே பூ மயமாயிருந்தன. அவ்வளவும் இரத்தச் சிவப்பு நிறமுள்ள கொத்துக் கொத்தான பூக்கள். மாலைக் கதிரவனின் செங்கிரணங்கள் அந்தப் புரசம் பூக்களின் இரத்தச் செந்நிறத்தை மிகைப் படுத்திக் காட்டின.

ஆம், அது அபூர்வமான அழகு பொருந்திய காட்சிதான். ஆனால் பரஞ்சோதிக்கு அக் காட்சி இன்பத்தை அளிக்கவில்லை. ஒரு வித பயத்தையே அளித்தது. அவன் பிறந்து வளர்ந்த திருச்செங்காட்டாங்குடி கிராமத்தின் தென்மேற்கு மூலையில் இருந்த மயானத்தில் சில புரச மரங்கள் உண்டு. அவை பங்குனி சித்திரையில் இவ்விதம் ஒரே செந்நிறப் பூ மயமாயிருப்பதை அவன் பார்த்திருந்தான். எனவே, புரச மரங்கள் பூத்திருக்கும் காட்சியைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்கு ருத்ர பூமியின் நினைவு வருவது வழக்கம்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

மலை வழியில்

சென்ற அத்தியாயத்தில் கூறிய சம்பவம் நிகழ்ந்து நாலு தினங்களுக்குப் பிறகு பரஞ்சோதி போர் வீரனைப் போல் உடை தரித்து, அழகிய உயர் சாதிப் புரவியின் மேல் அமர்ந்து, கையில் வேல் பிடித்து, மலைப் பாதையில் தன்னந் தனியாகப் போய்க் கொண்டிருந்தான்.

சூரியன் அஸ்தமிக்க இன்னும் இரண்டு நாழிகைப் பொழுதுதான் இருந்தது. எனினும், அந்த மலைப் பிரதேசத்து மாலை வெயில் அவனுடைய இடது கன்னத்தில் சுளீரென்று அடித்தது.

பகல் எல்லாம் தகிக்கும் வெயிலில் பிரயாணம் செய்து பரஞ்சோதி களைத்துப்போயிருந்தான்; குதிரையும் களைத்துப் போயிருந்தது. ஆகையால், குதிரையை மிகவும் மெதுவாகச் செலுத்திக்கொண்டு சென்றான்.

குதிரை மெள்ள மெள்ள அம் மலைப் பாதையில் ஏறி மேலே சென்றுகொண்டிருக்கையில், பரஞ்சோதியின் உள்ளமானது அடிக்கடி பின்னால் சென்று கொண்டிருந்தது.

சென்ற ஒரு வார காலத்தில் அவன் அடைந்த அதிசயமான அநுபவங்கள் எல்லாம் திரும்பத் திரும்ப முன்னும் பின்னுமாய் அவனுக்கு ஞாபகம் வந்து கொண்டிருந்தன.

* * *

காஞ்சி நகரில் புத்த பிக்ஷுவுடன் பிரவேசித்த அன்றிரவு நடந்த சம்பவங்கள் நினைவு வந்த போதெல்லாம், அவை உண்மையில் நிகழ்ந்தவைதானா, அல்லது கனவில் நடந்த சம்பவங்களா என்று பரஞ்சோதி அதிசயித்தான்.

அன்றிரவு நடந்த சம்பவங்களுக்குள்ளே, சிறையிலிருந்து வெளியேறி இராஜ விஹாரத்துக்கு அருகில் அவர்கள் வந்த சமயம், வீதியின் எதிர்ப் புறத்தில் இருட்டில் இரண்டு குதிரைகள் நின்றதும், அவற்றின் மேல் இன்னாரென்று இனம் கண்டு பிடிக்க முடியாமல் வீற்றிருந்தவர்கள் சக்கரவர்த்தியும் அவருடைய புதல்வருந்தான் என்று புத்த பிக்ஷு இரகசியமாகச் சொன்னதும், அவன் மனதில் ஆழ்ந்து பதிந்திருந்தது.

பின்னர், அவனுடைய கண்ணைக் கட்டிப் புத்த பிக்ஷு கோட்டைக்கு வெளியே அழைத்துப் போனது, ஆயனர் வீட்டுக்குச் சென்றது, அங்கே சக்கரவர்த்தி விஜயம் செய்தபோது புத்தர் சிலைக்குப் பின்னால் ஒளிந்திருந்தது, ஆயனச் சிற்பியார் சக்கரவர்த்தியைக் கேட்டுக் குதிரையும் லாஞ்சனையும் வாங்கிக் கொடுத்து, இந்தப் பிரயாணத்தில் தன்னை அனுப்பியது, யானை மேல் எறிந்த தன் வேல் தன்னிடமே வந்து சேர்ந்தது ஆகிய சம்பவங்களை நினைத்தபோது, பன்னிரண்டு நாளைக்கு முன்னால் திருச்செங்காட்டங் குடியிலிருந்து கால் நடையாகக் கிளம்பிய பரஞ்சோதி தானா இன்று இந்த அழகான குதிரை மேலே ஏறிச் செல்பவன் என்று அவன் ஆச்சரியப்பட்டான்!

* *

வெயிலின் வேகத்தினால் வியர்வையைத் துடைக்கவேண்டியிருந்தபோதெல்லாம் பரஞ்சோதிக்குத் தமிழகத்துச் சாலைகளில் பிரயாணம் செய்வதற்கும் திருவேங்கட மலையைத் தாண்டிய பிறகு இந்தப் பொட்டைக் காட்டில் பிரயாணம் செய்வதற்கும் உள்ள வித்தியாசம் நினைவு வந்து கொண்டிருந்தது. சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் சாலைகளின் இரு புறத்திலும் பெரிய விருட்சங்கள் அடர்த்தியாய் வளர்ந்து குளிர்ந்த நிழல் தந்துகொண்டிருக்கும். சாலைகளின் இரு புறத்திலுமுள்ள வயல்களில் பசுமையான இளம்பயிர் இளந்தென்றலில் அசையும் இன்பக் காட்சி தோன்றும். அல்லது முதிர்ந்த பயிர்கள் நெற்கதிர்களின் பாரம் தாங்கமாட்டாமல் வயல்களில் சாய்ந்து கிடக்கும். ஆங்காங்கே பசுமையான தென்னந் தோப்புகளும் மாந்தோப்புகளும் கண் குளிரக் காட்சி தந்துகொண்டிருக்கும். வாழைத் தோட்டங்களையும் கரும்புத் தோட்டங்களையும் கண்ணால் பார்த்

இவ்வாறு முடிவு செய்த சிவகாமி இதை எப்படிக் குமார சக்கரவர்த்திக்குத் தெரிவிப்பதென்று யோசித்தாள். அவரோ தான் இருந்த பக்கம் திரும்பிப் பார்ப்பதாகவே இல்லை. அவருடைய களை பொருந்திய முகம் இன்னும் கடு கடு வென்றுதா னிருந்தது.

தற்செயலாகச் சிவகாமியின் பார்வை கீழே தரையில் கிடந்த ஒரு காவிக் கட்டியின்மேல் விழுந்தது.

சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று. சிவகாமி அந்தக் காவிக் கட்டியைக் குனிந்து எடுத்துக் கொண்டு, பாறையில் சித்திரம் வரையலானாள்.

அப்படி யொன்றும் பிரமாதமான சித்திரம் இல்லை. குளத்தின் தண்ணீருக்கு அடையாளமாக அலையைப் போன்ற இரு கோடுகளை இழுத்தாள். அதன் மேல் ஒரு தாமரைப் பூவை வரைந்தாள். பக்கத்தில் இரண்டு மொட்டுக்களையும் போட்டாள். குளத்தின் கரையிலே ஒரு மான் குட்டியின் சித்திரத்தை எழுதினாள்.

எழுதும்போதே கடைக் கண்ணால் பார்த்து, நரசிம்ம வர்மர் தன்னைக் கவனிப்பதைத் தெரிந்து கொண்டாள்.

அப்போது சக்கரவர்த்தி தம்முடன் வந்த ஏவலாளரில் ஒருவனிடம் ஆயனரைச் சுட்டிக்காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

சித்திரம் எழுதி முடிந்ததும் சிவகாமியின் மனதில் அமைதி ஏற்பட்டது. அந்தச் சித்திரத்தி லடங்கிய செய்தியை நரசிம்ம வர்மர் கட்டாயம் தெரிந்து கொள்வார். மற்றவர்களுக்கோ அதில் அர்த்தம் ஒன்றும் இராது. ஏதோ கிறுக்கி யிருக்கிறது என்றுதான் எண்ணிக் கொள்வார்கள்! குமார சக்கரவர்த்திக்குத் தன்னிடம் அன்பு உண்டென்பது உண்மையானால் இந்தச் சித்திரத்தைப் பார்த்து விட்டு அவசியம் அவர் தாமரைக் குளத்துக்கு வந்து சேர்வார்!

* * *

அன்று மாலை சக்கரவர்த்தியும் குமாரரும் குதிரைகளின் மேல் ஏறிக் காஞ்சிக்குத் தரைப் பாதை வழியாகக் கிளம்பினார்கள். அந்தப் பாதை மத்தியானம் அவர்கள் வந்திருந்த ஐந்து குன்றுகளின் ஓரமாகத்தான் சென்றது. அவ்விடத்துக்கு வந்ததும் நரசிம்மர் சற்றுப் பின் தங்கினார். சிவகாமி சித்திரம் எழுதிய பாறைக்கு அருகில் வந்ததும் குதிரையை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினார். அங்கே எழுதி யிருந்த சித்திரத்தைப் பார்த்ததும் அவருடைய முகம் அந்தத் தாமரையைப் போலவே மலர்ச்சியடைந்தது. தரையில் கிடந்த அதே காவிக் கட்டியை அவரும் எடுத்துக் கொண்டு, மானுக்கும் தாமரைக்கும் நடுவில் ஒரு வேலின் சித்திரத்தை எழுதினார்! உடனே குதிரை மீதேறி அதை விரைவாய்ச் செலுத்திக் கொண்டு சென்று தந்தையுடன் சேர்ந்து கொண்டார்.



ஆயனர் சற்றுத் தயங்கி நிற்கவே, "ஏன் தயக்கம், ஆயனரே! இந்த வேல் நீர் அனுப்பப் போகும் இளம் பிள்ளையின் வேல்தான். மதயானையின் கோபத்திலிருந்து உம்மையும் சிவகாமியையும் பாதுகாத்த வேல்தான். பரஞ்சோதி இதை வாங்கிக் கொள்ள ஆட்சேபிக்க மாட்டான்" என்றார் சக்கரவர்த்தி.

இதைக் கேட்ட ஆயனர் மட்டுமல்ல, — நரசிம்மரும் சிவகாமியும்கூட —ஆச்சரியக் கடலில் மூழ்கினார்கள்.

ஆயனர் தட்டுத் தடுமாறி, "பல்லவேந்திரா! தங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றார்.

"புத்த பகவான் என் கனவிலே வந்து சொன்னார். தன்னுடைய சிலைக்குப் பின்னால் ஒளிந்திருந்தவர்களைப் பற்றியும் புத்தர் எனக்குக் கூறினார்....ஆயனரே! பல்லவ சக்கரவர்த்தியின் கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டாமல் பல்லவ சாம்ராஜ்யத்தில் எதுவும் நடக்க முடியாது என்று உமக்குத் தெரியாதா?"

உடனே ஆயனர், சக்கரவர்த்தியின் பாதங்களில் விழுந்து, "பல்லவேந்திரா! நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் அருள் கூர்ந்து மன்னிக்க வேண்டும். சித்திரக் கலையில் உள்ள ஆசையினால் இந்தக் காரியத்தில் இறங்கினேன்" என்று தொண்டையடைக்கக் கூறினார்.

"ஆயனரே! நீர் செய்ததில் ஒரு தவறும் இல்லை. சித்திரக் கலையில் உமக்கு எவ்வளவு பிரேமையோ அவ்வளவு எனக்கும் உண்டு. அஜந்தா வர்ண இரகசியத்தை அறிவதில் உமக்கு எவ்வளவு ஆசையோ அவ்வளவு எனக்கும் உண்டு. தைரியமாய்ப் பரஞ்சோதியை அனுப்பி வையும். ஆனால் இதெல்லாம் எனக்குத் தெரிந்ததாக அந்த புத்த பிக்ஷுவிடம் மட்டும் சொல்ல வேண்டாம். சொன்னால் காரியம் கெட்டுப் போகலாம். ஏனோ தெரியவில்லை; பௌத்தர்களுக்கு என் பேரில் இல்லாத சந்தேகங்கள் எல்லாம் தோன்றுகின்றன. புத்த பகவானிடம் எனக்குள்ள பக்தியை அவர்கள் அறியவில்லை. குன்றைக் குடைந்து அமைக்கும் இந்த ஐந்து கோயில்களில் ஒன்றில் புத்த பகவானுடைய 32 அடி உயரச் சிலையொன்று செய்து வைக்கப் போகிறேன், ஆயனரே! அதைப் பற்றித்தான் நீர் வரும்போது மாமல்லரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்!" என்றார்.

இதுதான் சமயம் என்று மாமல்லர் "அப்பா!" என்று அழைக்க, மகேந்திரர் திரும்பிப் பார்த்தார்.

"சத்ருக்னன் வந்தானா, அப்பா!"

"ஆம், குழந்தாய்! இன்று காலையில் வந்தான். எல்லாம் நான் ஊகித்தபடிதான்."

இவ்விதம் இங்கு சம்பாஷணை நடந்து கொண்டிருந்தபோது, பாறை ஓரத்தில் சற்று மறைவாக நின்று இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சிவகாமியின் உள்ளத்தில் பலவிதமான எண்ணங்கள் அலை மோதி எழுந்தன.

"ஆ! இந்தச் சக்கரவர்த்திதான் எவ்வளவு பொல்லாதவராயிருக்கிறார்? புத்த பிக்ஷுவைப் பற்றி மாமல்லரிடம் நான் குறிப்பாகத் தெரிவிக்க வேண்டுமென்றிருக்க, இவருக்கு ஏற்கெனவே எல்லாம் தெரிந்திருக்கிறதே! இவரிடம் எதையும் மறைத்து வைக்க முடியாது போலிருக்கிறதே! ஒரு வேளை நம்முடைய இரகசியத்தையும் இவர் அறிந்திருப்பாரோ? அதனாலேதான் ஒரு வேளை குமார சக்கரவர்த்தி நம்மிடம் இவ்வளவு பராமுகமாக இருக்கிறாரோ? நாம் ஏதேனும் அசட்டுத்தனம் செய்து அதனால் தெரிந்து விட்டதோ! இங்கு நாம் இப்போது வந்ததே ஒரு வேளை பிசகோ?..."

இவ்விதம் எண்ணுவதெல்லாம் எண்ணி அவள் உள்ளம் ஏங்கிற்று. விரைவிலே குமார சக்கரவர்த்தியை மறுபடியும் பார்த்து அவருடைய கோபத்துக்குக் காரணம் வினவ வேண்டும்; தன் பேரில் பிழையிருந்தால் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்; எப்படியும் அவரைச் சீக்கிரமாகத் தனிமையில் கண்டு பேசினாலன்றித் தனக்கு மனச் சாந்தி ஏற்படாது.

சிவிகைகளும், சிவிகை தூக்கும் ஆட்களும் இருக்கிறார்கள் அல்லவா? பின், எதற்குக் குதிரை?" என்று சக்கரவர்த்தி கேட்டு நிறுத்தினார்.

ஆயனர் சற்றுத் தைரியமடைந்து, "பல்லவேந்திரா! மிகவும் முக்கியமான ஒரு காரியத்துக்காகத்தான் கேட்டேன். ஆனால், அதனாலே யுத்த காரியங்கள் தடைப்படுவதாயிருந்தால் ......" என்று நிறுத்தினார்.

"அந்த முக்கியமான காரியம் என்ன? அதை அறிந்து கொள்ளத்தான் விரும்புகிறேன்."



"பிரபு! அஜந்தா வர்ண சித்திரங்களின் இரகசியத்தை அறிய வேண்டுமென்று எத்தனையோ தடவை நாம் பேசிக் கொண்டதில்லையா?"

"ஆமாம்; அதற்கும் குதிரைக்கும் என்ன சம்பந்தம்?"

"அந்த இரகசியத்தை அறிந்தவர் ஒருவர் ஸ்ரீ பர்வதத்தில் உள்ள புத்த ஸங்கிராமத்தில் இருக்கிறார்."

"அப்படியா? அதை அவரிடமிருந்து அறிந்து வர நீர் போவதாக உத்தேசமா?"

"எனக்குக் குதிரை ஏறவே தெரியாது, பிரபு! தெரிந்தவர் ஒருவரை அனுப்ப எண்ணினேன்."

"இதை முன்னமே ஏன் சொல்லவில்லை, ஆயனரே? அவ்வளவு முக்கியமான காரியமென்று தெரிந்தால், இவ்வளவு ஆட்சேபம் சொல்லியிருக்க மாட்டேனே? — ஆஹா! நான் என்ன எண்ணியிருந்தேன், தெரியுமா? அஜந்தாவின் அற்புத சித்திரங்களை நேரில் போய்ப் பார்த்து வரவேண்டுமென்ற ஆசையினால் இந்தப் பாதகப் புலிகேசியுடன் கூட சிநேகம் செய்து கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தேன். அதெல்லாம் பகற்கனவாய்ப் போய்விட்டது. — போகட்டும். குதிரை தருகிறேன், ஆயனரே! இன்னும் ஏதாவது வேண்டுமா?"

"பல்லவேந்திரரின் ரிஷப லாஞ்சனை பதித்த பிரயாணச் சீட்டும் வேண்டும். இது யுத்த காலமல்லவா பிரபு?"

"ஆகட்டும்; அதுவும் தருகிறேன். இவ்வளவு முக்கியமான காரியத்துக்கு யாரை அனுப்புவதாக உத்தேசம், ஆயனரே!"

"என்னுடைய சீடன் ஒருவனை அனுப்புகிறேன்."

"சத்ருப் படைகள் வரும் வழியிலே அவன் போகவேண்டியிருக்குமே! கையிலே அவன் தக்க ஆயுதம் எடுத்துப் போகவேண்டும். இதோ இந்த வேலை அவனிடம் கொடுத்து அனுப்புங்கள்" என்று கூறிச் சக்கரவர்த்தி, சுசிம்மரிடமிருந்து தாம் வாங்கி வைத்திருந்த வேலை நீட்டினார்.

நன்றாய்க் குதிரை கேட்டீர், ஆயனரே! தென்னாடு என்றும் கண்டிராத மகா பெரிய யுத்தம் வந்திருக்கிறது என்று உமக்குத் தெரியுமா? காஞ்சியிலிருந்து தினந்தோறும் எத்தனை தூதர்கள் நாலா பக்கங்களுக்கும் போகவேண்டியிருக்கும் என்று தெரியுமா? போர்க்களத்துக்கும் காஞ்சிக்கும் தினம் எத்தனை தூதர்கள் வந்து போய்க் கொண்டிருக்க வேண்டும் என்று தெரியுமா? குதிரையா கேட்டீர், குதிரை? அதைத் தவிர வேறு ஏதாவது கேளும்!" என்று சக்கரவர்த்தி சரமாரியாகப் பொழிந்து நிறுத்தினார்.

மகேந்திர பல்லவர் இவ்வளவு படபடப்புடன் பேசிக் கேட்டு ஆயனர் அறியாதவராதலால், பயந்து மிரண்டு ஸ்தம்பித்துப் போய் நின்றார்.

"ஓஹோ! உமக்கு வேறு ஒன்றும் வேண்டாம், குதிரைதான் வேண்டும் போலிருக்கிறது. பல்லவ சாம்ராஜ்யத்தின் மகா சிற்பி ஒரு குதிரையை யாசித்தார், அதை மகேந்திர பல்லவன் கொடுக்கவில்லை என்ற பழிச் சொல் எனக்கு வேண்டாம். குதிரை தருகிறேன்; ஆனால் எதற்காக என்று மட்டும் சொல்லும். நீரும் சிவகாமியும் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய



அப்பால் சென்று ஒரு பாறையின் பின்னால் ஒதுங்கி நின்றாள்.

ஆனால், நரசிம்மருடைய மனோநிலை உண்மையில் எவ்வாறு இருந்தது? அவர் கோபம் கொண்டிருந்தாரா? அப்படியானால், யார் மீது?

ஆம்; நரசிம்மர் கோபங்கொண்டு தானிருந்தார். ஆனால் யார் மீது என்பதை நாம் அறியோம். அது நரசிம்மருக்கே தெரிந்திராத போது நமக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

உலகத்தில் எவ்வளவோ அறிய முடியாத மர்மங்கள் இருக்கின்றன. அவற்றில் எல்லாம் மனிதர்களுடைய மனோபாவத்தைப் போன்ற அறிய முடியாத மர்மம் வேறில்லை. நரசிம்மருடைய உள்ளத்திலே சிவகாமியிடம் அளவிடக் கூடாத பிரேமை பொங்கிக் கொண்டிருந்தது. சிவிகையிலே அவளுடைய திவ்ய வதனத்தைப் பார்த்ததும் அவருக்கு எல்லையில்லாத குதூகலம் ஏற்பட்டது. உடனே ஓடிச் சென்று அவளை வரவேற்க வேண்டுமென்றும், கையைப் பிடித்துச் சிவிகையிலிருந்து இறக்கிவிட வேண்டுமென்றும் ஆவல் பொங்கிற்று. அதெல்லாம் முடியாமற் போகவே அவரது ஆசை, ஆவல் எல்லாம் கோபமாக மாறியது. அந்தக் கோபமானது எல்லாவற்றையும் எல்லாரையும் தழுவி நின்றது. பெரிய சாம்ராஜ்யத்துக்கு உரிமையுடன் பிறந்த தமது பிறப்பின் மேலேயே கோபங் கொண்டார். "எதற்காகச் சக்கரவர்த்தியின் அரண்மனையிலே தான் பிறந்திருக்கவேண்டும்? ஏழைச் சிற்பியின் மகனாக ஏன் பிறந்திருக்கக் கூடாது?" என்று எண்ணினார். பிறகு, சிவகாமியின் பிறப்பின்மேல் அவருடைய கோபம் பாய்ந்தது! "அவள் ஏன் சிற்பியின் மகளாய்ப் பிறந்திருக்க வேண்டும்? இவ்வளவு அழகுடனும், அறிவுடனும் அரண்மனையில் இராஜகுமாரியாக ஏன் பிறந்திருக்கக் கூடாது?" என்று கோபப்பட்டார்.

தாம் போர்க் களத்துக்குப் போகப் போவதில்லை என்று தந்தை சொன்னதும் சிவகாமியின் முகத்தில் பூத்த புன்முறுவல் அவருடைய கோபத்துக்குத் தூபம் போட்டது போலாயிற்று. போர்க்களத்துக்குப் போகாமல் அரண்மனையில் உட்கார்ந்திருப்பது அவமானம் என்பதை அவள் உணரவில்லை! போர்க் களத்துக்குப் போகாவிட்டாலும் அவளை அடிக்கடி பார்க்கவாவது முடியப் போகிறதா? அதுவும் இல்லை. காஞ்சிக் கோட்டையை விட்டு வெளிக் கிளம்பக் கூடாது என்று தந்தை வாக்குறுதி வாங்கிக்கொண்டிருக்கிறார். இதையெல்லாம் அறியாமல் சிவகாமி புன்னகை பூத்து மகிழ்கிறாள்! இப்படிப்பட்ட அசட்டுத்தனம் உண்டா?

இம்மாதிரி எண்ணங்களினால் நரசிம்மருடைய கோபம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

* * *

மனோ லோகத்தில் மேற்படி நாடகம் நடந்து கொண்டிருக்கையில், சக்கரவர்த்தியும் ஆயனரும் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

தம்முடைய முகத்தையும் மாமல்லருடைய முகத்தையும் ஆயனர் மாறி மாறி ஏறிட்டுப் பார்ப்பதைக் கவனித்த சக்கரவர்த்தி, "ஆயனரே! ஏதாவது உமக்கு வேண்டுமா? என்னிடமோ மாமல்லரிடமோ தெரியப்படுத்த வேண்டியது ஏதாவது இருக்கிறதா?" என்று வினவினார்.

"ஆம், பல்லவேந்திரா! எனக்கு ஒரு பொருள் வேண்டும். அதைத் தங்களிடம் யாசிப்பதா, குமாரரிடம் கேட்பதா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் ஆயனர்.

மகேந்திர வர்மர் புன்னகையுடன், "இன்றைக்கு என்னையே கேட்கலாம். நாளைக்கு நான் படையுடன் காஞ்சியிலிருந்து கிளம்பிச் சென்ற பிறகு, என்ன வேண்டுமோ அதைக் குமாரரிடம் கேட்கலாம்" என்றார்.

"பிரபு! எனக்கு ஒரு குதிரை வேண்டும்!"

"ஆ! என்ன கேட்டீர்?"

"ஒரு நல்ல குதிரை வேண்டும்!"

"குதிரையா? அதிலும் நல்ல குதிரையா? ஆயனரே! அதைக் காட்டிலும் என்னுடைய உயிரை நீர் கேட்டிருக்கலாம்; இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தையே கேட்டிருக்கலாம்

வார்த்தையும் உண்டா? அடிமை அவ்விதமே செய்கிறேன்" என்று கூறினார்.

"ஆயனரே! இந்த ஐந்து கோயில்களையும் சாவகாசமாக வேலை செய்யலாம் என்று எண்ணியிருந்தோமல்லவா? அந்த நிலைமை இப்போதில்லை. இந்தக் கோயில்களை எவ்வளவு சீக்கிரமாக வேலை செய்யலாமோ, அவ்வளவு சீக்கிரமாக முடிக்க வேண்டும். கோயில்கள் பூர்த்தியாகும் வரையில் நீர் வேறு எந்த வேலையையும் கவனிக்க வேண்டியதில்லை. இதைச் செய்து முடிப்பதற்கு உமக்குச் சர்வாதிகாரமும் அளிக்கிறேன்" என்று மகேந்திரர் கூறி முடித்ததும், "பிரபு! காத்திருக்கிறேன்" என்று ஆயனர் பணிவுடன் தெரிவித்தார்.

"இந்த வேலைக்காக நீர் எப்போது எவ்வளவு திரவியம் கேட்டாலும் கொடுக்கும்படியாகத் தனாதிகாரிக்குக் கட்டளையிட்டிருக்கிறேன். இன்னும் உமக்கு வேண்டிய ஆட்களையும், வேறு வசதிகளையும் உடனுக்குடன் அனுப்பும்படி முதல் அமைச்சருக்குச் சொல்லியிருக்கிறேன். எந்தக் காரணத்தினாலாவது காரியம் குந்தகப்படுவதாயிருந்தால் நீர் குமார சக்கரவர்த்திக்கு ஆள் அனுப்பி, வேண்டியதைத் தெரியப்படுத்தலாம்" என்று சக்கரவர்த்தி கூறியதும், அருகில் நின்ற மாமல்லரை ஆயனர் நோக்கினார். அப்போது அவருடைய முக பாவமானது ஏதோ கேட்க வேண்டுமென்ற விருப்பத்தைப் புலப்படுத்தியது.

"ஆம், ஆயனரே! இனிச் சில காலத்துக்கு உமக்கு வேண்டியதையெல்லாம் மாமல்லரிடந்தான் தெரியப்படுத்த வேண்டும். நாளைத்தினம் பல்லவ சைன்யத்துடன் நான் போர்க்களத்துக்குப் புறப்பட்டுச் செல்கிறேன். நான் திரும்பி வரும்வரையில் பல்லவ சாம்ராஜ்யத்தை நிர்வகிக்கும் சகல பொறுப்புக்களையும் மந்திரி மண்டலத்தார் மாமல்லருக்கு அளித்திருக்கிறார்கள். இனி மாமல்லர் குமார சக்கரவர்த்தியுமல்ல; யுவ மகாராஜாவுமல்ல. நாளை முதல் அவர்தான் பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி; தர்ம மகாராஜாதி ராஜர்."

சக்கரவர்த்தி ஆயனரிடம் சற்றுக் கடுமையான குரலில் கூறிவந்த மொழிகளைக் கேட்டுக் கவலையும் பயமும் கொண்டிருந்த சிவகாமி அவருடைய கடைசி வார்த்தைகளைக் கேட்டதும் அளவிலாத குதூகலம் அடைந்தாள். அவளுடைய மனதில் பலவித இன்பகரமான எண்ணங்கள் பொங்கித் ததும்பின. அவற்றுள் முக்கியமானது, மாமல்லர் இப்போது போர்க்களத்துக்குப் போகவில்லை என்பதுதான். அதோடு சக்கரவர்த்தியும் போய்விடுகிறார். மாமல்லர் தனியாக—சக்கரவர்த்திக்குரிய சர்வாதிகாரங்களுடன்—இருக்கப் போகிறார்! இனி அவரும் தானும் அடிக்கடி சந்திப்பதற்குத் தடையொன்றும் இராது! தாமரைக் குளக்கரையில் மாமல்லரைச் சந்தித்து அளவளாவுவதைப் பற்றிய பகற் கனவுகள் சிவகாமியின் உள்ளத்தில் எழுந்தன. நேற்று, குளக்கரையிலிருந்து தன் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு மரத்தடியின் பீடத்துக்கு மாமல்லர் போனதை நினைத்தபோது, அவளுடைய தேகமெல்லாம் சிலிர்த்தது. முகத்தில் அவளை அறியாமல் முறுவல் தோன்றியது. ஆசை ததும்பிய கண்களின் ஓரத்தினால் மாமல்லரை அவள் பார்த்தாள். ஆனால், ஐயோ! இதென்ன? அவருடைய கருணை முகத்தில் இப்போது ஏன் இந்தக் கடுகடுப்பு? என்ன கோபம்? தன்னை ஏன் அவர் பார்க்கவில்லை? ஒருவேளை தான் அவ்விடம் வந்ததே அவருக்குப் பிடிக்கவில்லையோ?

பின்னரும், இரண்டு மூன்று தடவை சிவகாமி மாமல்லரின் முகத்தை ஆவலுடன் நோக்கினாள். அவர் அவள் பக்கம் பார்க்கவே இல்லை. நேற்றுத் தாமரைக் குளத்தில் அகன்ற கண்களால் விழுங்கிவிடுபவர் போல் தன்னைப் பார்த்தவர், பின்னர் வீட்டிலே சக்கரவர்த்தியும் ஆயனரும் பேசிக் கொண்டிருந்தபோது அடிக்கடி கண்களினாலே என்னவெல்லாமோ தன்னுடன் இரகசியம் பேசியவர், இப்போது கோபமாய்ப் பராமுகமாய்த் தன்னைப் பார்க்கவும் விரும்பாதவர் போல் இருப்பதின் காரணம் என்ன? சிவகாமியின் கண்களில் கண்ணீர் ததும்பும் போலிருந்தது. அவள் விரைவாக அங்கிருந்து சற்று



இருபத்தேழாம் அத்தியாயம்

"ஒரு குதிரை!"

பல்லவ சக்ரவர்த்தியையும் அவருடைய திருக்குமாரரையும் பார்த்த உடனே, சற்றுத் தூரத்திலேயே, சிவிகை தரையில் இறக்கப்பட்டது. ஆயனரும் சிவகாமியும் சிவிகையிலிருந்து இறங்கிப் பயபக்தியுடன் நடந்து வந்தார்கள்.

"ஆயனரே! வாருங்கள்! சிவகாமியையும் அழைத்து வந்தீர்களா? மிக்க நல்லது. பிரயாணம் சௌகரியமாயிருந்ததா?" என்று சக்ரவர்த்தி கேட்டார்.

"பல்லவேந்திரா! தங்களுடைய வெண் கொற்றக் குடையின் நிழலின் கீழ்ப் பிரயாணம் சௌகரியமாயிருப்பதற்குக் கேட்பானேன்?" என்று கூறிய வண்ணம் ஆயனர் சக்ரவர்த்தியின் அருகில் வந்து நமஸ்கரித்தார்.

அவருக்குப் பின்னால் அடக்க ஒடுக்கத்துடன் வந்த சிவகாமியும் சக்ரவர்த்திக்கு நமஸ்கரித்தாள்.

அவளுடைய உள்ளத்தில் சக்ரவர்த்தியிடம் பக்தியும் மரியாதையும் நிறைந்திருந்தன. அதே சமயத்தில் இன்னதென்று தெரியாத ஒருவகைப் பயமும் அவர் விஷயத்தில் குடிகொண்டிருந்தது.

"சிவகாமி! உனக்கு மங்களம் உண்டாகட்டும். உன்னிடம் அடைக்கலம் புகுந்திருக்கும் பரத சாஸ்திரக் கலை மேலும் மேலும் வளர்ந்து பரிபூரணம் அடையட்டும். நீ இன்று வந்ததும் ஒருவிதத்தில் நல்லதுதான். இனிக் கொஞ்ச காலத்துக்கு நீங்கள் இருவரும் இங்கேயே தங்கும்படி இருக்கும்' என்று மகேந்திரர் கூறி, பின்னர் ஆயனரைப் பார்த்துச் சொல்கிறார்:—

"ஆயனரே! இன்றைக்கு உங்கள் பிரயாணம் சௌகரியமாயிருந்தது என்று சொன்னீரல்லவா? இனி நெடுகிலும் அப்படியேயிருக்கும் என்று சொல்லுவதற்கில்லை. இந்த யுத்தம் முடியும் வரையில், சாலைகளிலே சைன்யங்களின் நடமாட்டம் அதிகமாயிருக்கும். ஆகையால் இன்னும் கொஞ்ச காலத்துக்கு நீர் இங்கேயே வந்து தங்கிவிட வேண்டியது!........."

ஆயனருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அரை குறையாகச் செய்து, அவருடைய வீட்டிலிருந்த நடன சிற்ப உருவங்கள் எல்லாம் அவருடைய கண் முன்னால் நின்றன.

"பல்லவேந்திரா!......" என்று ஏதோ ஆயனர் சொல்ல ஆரம்பித்தார்.

மகேந்திரர் தமது குரலைச் சிறிது கடுமைப் படுத்திக் கொண்டு, "ஆயனரே! மறு வார்த்தை வேண்டாம். நீரும் உமது புதல்வியும் நாளை முதல் இங்கே வந்துவிட வேண்டியது. இது என் ஆக்ஞை!" என்றார்.

ஆயனர் நடுங்கியவராய், "பல்லவேந்திரா! தங்கள் ஆக்ஞைக்கு மறு

படித்துப் பார்!

ஆரணிய காண்டம்

[ஆசிரியர் : கம்பர்; பதிப்பாசிரியர் : ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்; பிரசுரம் : புதுமைப் பதிப்பகம், காரைக்குடி; விலை ரூ. 5.]

இருபது வருஷத்துக்கு முன்னால் தமிழ் நாட்டில் "கம்பராமாயணம்" என்றால் "அப்பா! அது ரொம்ப கனமாச்சே!" என்பார்கள். ஏதாவது நீளமான விஷயத்துக்கு உபமானம் வேண்டியிருந்தால், "அந்தக் கதையை ஏன் கேட்கிறீர்கள்? அது பெரிய கம்ப ராமாயணம் ஆச்சே!" என்பார்கள்.

அந்த நிலைமை மாறி, இப்போது கம்ப ராமாயணம் என்றாலே தமிழர்கள் பலருடைய நாக்கில் ஜலம் ஊறும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்று, கம்பன் கவிதையைத் திரைகடல் தந்த தெள்ளமுதமாகப் போற்றுவோர் பல்லாயிரக் கணக்கில் இருக்கிறார்கள்.

இந்த மாறுதலுக்கு ஆதிகாரணமானவர் காலஞ்சென்ற வ. வே. ஸு. ஐயர் என்று சொல்லலாம். "வால்மீக ராமாயணத்தைக் காட்டிலும் கம்ப ராமாயணம் கவிதைச் சுவையில் உயர்ந்தது; உலக மகா கவிகள் எல்லாரிலும் தலைசிறந்த கவி கம்பன்!" என்றெல்லாம் மகரிஷி வ. வே. ஸு. ஐயர் அழுத்தந் திருத்தமாகக் கூறியது தமிழ் மக்கள் சிலருடைய உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்து கிளர்ச்சியை உண்டாக்கிற்று.

தமிழ்நாட்டின் துரதிர்ஷ்டத்தினால் ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர் அகால மரணமடைந்தார். அவருக்குப் பின்னால் கம்பன் கவிதைச் சுவையைத் தமிழர்களுக்கு அள்ளி வழங்கும் பணியை ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் இடைவிடாமல் செய்து வருகிறார்கள்.

இரண்டு வருஷத்துக்கு முன்னால் டி. கே. சி. அவர்களின் பால காண்ட — அயோத்யா காண்டப் பதிப்பு வெளியாயிற்று.

அதைப் படித்து இன்புற்ற கம்பனின் அன்பர்கள், "ஆனால்; இப்படி இராமனைச் சித்திர கூடத்திலேயே நிறுத்தி விட்டார்களே? இவ்வளவு தாமதமாகப் போனால் இராமர் திரும்பி அயோத்திக்கு வருவதற்குள் பதினாலு வருஷத்துக்கு மேலேயே ஆகிவிடும் போலிருக்கிறதே!" என்று அதிருப்திப் பட்டார்கள்.

நல்லவேளையாக, இப்போது ஆரணிய காண்டம் வெளியாகிவிட்டது.

இராமர் சீதை லக்ஷ்மணர் எல்லாருமாகச் சித்திர கூடத்திலேயே இருந்து விட்டாலும் பாதகமில்லை. இப்போது இராமர் நடுக் காட்டில் அலைகிறார்; சீதை அசோகவனத்தில் தவிக்கிறாள். இப்படிப்பட்ட நிலையில் அவர்களை எப்போதும் வைத்து விடாமல், அடுத்த காண்டங்களும் விரைவில் வந்துவிடுமென்று நம்புகிறோம்.

தரித்திரம் அதிகமாயுள்ள காலத்திலேதான் பிரஜா உற்பத்தி அதிகமாயிருக்குமென்று சொல்வார்கள். அது போலவே, காகிதப் பஞ்சம் அதிகமாயிருக்கும் இந்த நாளிலேதான் தமிழ் நாட்டில் அபரிமிதமான புத்தகங்கள் வெளியாகிக் கொண்டு வருகின்றன. அவையெல்லாம் அழகான உடைகளுடன் "புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" என்னும் முதுமொழிக்கு இலக்கியமாக இருக்கின்றன. தமிழ்ப் புத்தகம் எதுவானாலும் பழைய பஞ்சாங்கமாகக் காட்சி யளிக்கும் காலம் போய்விட்டது.



அவ்விதம் 1944-ம் ஆண்டில் வெளியாகி யிருக்கும் புத்தகங்களுக்குள்ளே முக்கியத்திலும், அழகிலும் தலைசிறந்த புத்தகம் எது வென்று கேட்டால், இந்தக் கம்ப ராமாயணம் — ஆரணிய காண்டத்தைத்தான் சொல்ல வேண்டும்.

சித்திரக் கலைஞர் சர்மாவினால் தீட்டப் பெற்ற வர்ண சித்திரங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தா யிருக்கின்றன.

கவிதைக் களஞ்சியமாகவும், கலைப் பொக்கிஷமாகவும் கருதித் தமிழர்கள் போற்ற வேண்டிய நூல் இது.

பரதனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. குற்றமொன்றும் அவன் செய்யவில்லை. ஏதோ பகைவர்கள் வந்து ராமனைத் துரத்தினார்களா என்றால் அதுவுமில்லை.

'குற்றம்ஒன் றில்லையேல்,
 கொதித்து வேறுளோர்
செற்றதும் இல்லையேல்,
 தெய்வத் தால் அன்றேல்,
பெற்றவன் இருக்கவே
 பின்னை கான்புக
உற்றதென், முன்னவன்
 உலந்த தென் ?' என்றான்.

[முன்னவன் உலந்தது என்: தந்தை உயிர் துறக்கக் காரணம் என்ன ?]

இவ்வளவு ஆற்றாமையோடு கேட்ட பரதனுக்கு ஒரு எக்களிப்போடு பதில் சொல்லுகிறாள் கைகேசி: தசரதன் தன் வாயினாலேயே எனக்கு ஒரு வரம் கொடுத்தான். அந்த வரத்தைக் கொண்டு அவனுடைய மைந்தனைக் காட்டுக்குப் போகச் செய்தேன்.

'வாக்கினால் வரந்தரக்
 கொண்டு, மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப்,
 போக்கிப் பார்உனக்(கு)
ஆக்கினேன் ; அன்னது
 பொறுக்க லாமையால்,
நீக்கினான் தன்னுயிர்
 நேமி வேந்(து)' என்றாள்.'

[போக்கிப் பார் உனக்கு ஆக்கினேன்: ராமனைக் காட்டுக்குப் போகச் செய்து ராஜ்யத்தை உன்னுடையதாக்கினேன்; அன்னது பொறுக்காமையால்: ராஜ்யம் உனக்கு ஆனதுபற்றி ஆற்றாமையுண்டாயிற்று உன் தந்தைக்கு. நீக்கினான் தன்னுயிர் நேமி வேந்து: சக்கரத்தை ஏந்திய ராஜாதி ராஜனான தசரதன் இந்த விதமாக உயிரை மாய்த்துக்கொண்டான்.]

ராஜ்யம் பரதனுக்குப் போய்விட்டது என்பது தந்தைக்குப் பொறுக்கவில்லை என்று சொல்லி மகனுக்கு வெறுப்பை யுண்டாக்கப் பார்க்கிறாள்! பின்னை மேலுள்ள பாசம் இப்படியெல்லாம் எண்ணச் சொல்லுகிறது; பேசவும் சொல்லுகிறது.



கம்பர் தரும் காட்சி

— டி.கே.சி. —

63. நெருப்புண்ட பரதன்

வயசு காலத்தில் ஒருவன் இறப்பது இயல்பு. ஆனாலும், தந்தை இறந்தான் என்ற விஷயம் எதிர்பாராததாகத் தோன்றுவதும் இயல்பு. மனசை ரொம்ப பாதிக்கும் அது. ஆனால், நற்குணங்கள் எல்லாம் வாய்ந்த உயிருக்கு உயிரான தமையன் காட்டுக்குப் போய் விட்டான் என்றால் எதிர் பார்க்கக் கூடிய விஷயமா? சகிக்கக் கூடிய விஷயமா? பரதனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. இன்னும் என்ன என்ன வினையப் போகிறதோ என்று அஞ்சுகிறான்.

'வனத்தினன்' என்றவன்
இசைத்த மாற்றத்தை
நினைத்தனன் இருந்தனன்
நெருப்புண் டானென;—
'வினைத்திறம் யாதினி
விளைப்ப(து), இன்னமும்
எனைத்துள கேட்பன
துன்பம் யான்!' என்றான்.

[வனத்தினன் என்றவன் இசைத்த மாற்றத்தை நினைத்தனன்: காட்டுக்குப் போய் விட்டான் ராமன் என்று கைகேயி சொன்ன சொல்லை எண்ணிப் பார்த்தான். இருந்தனன் நெருப்பு உண்டான் என: அப்படியே பிரமித்து உட்கார்ந்து விட்டான், ஏதோ நெருப்பு மயமான நாராசத்தை உட்கொண்டவன்போல. வினைத்திறம் யாது இனி விளைப்பது: பூர்வ வினையாகிய விதி என்ன செய்யப் போகிறதோ; இன்னமும் கேட்டுத் துன்பம் அனுபவிப்பதற்கு என்ன என்ன இருக்கிறதோ.]

உணர்ச்சி யற்று அங்கேயே உட்கார்ந்திருந்த பரதனுக்குச் சிறிது நேரங் கழித்து உணர்ச்சி வந்தது. இடைவிட்டு விம்மி விம்மிப் பெருமூச்செறிந்து கொண்டிருந்தவன் ஒரே ஏக்கமாக ஏங்குகிறான். அந்த ஏக்கத்திலேயே கேள்வி கேட்கிறான்:

ஏங்கினன் விம்மலோ(டு)
இருந்த ஏந்தல்,—'அப்
பூங்கழல் காவலன்
வனத்துப் போயது
தீங்கிழைத்(து) அதனினோ,
தெய்வம் சீறியோ,
ஓங்கிய விதியினோ,
யாதி னோ?' என.

[ஏந்தல்: அரச குமாரனாகிய பரதன். அப் பூங்கழல் காவலன்: அழகிய கழலையணிந்த அந்த ராமன்; தெய்வம் சீறியோ: தெய்வத்துக்கு ஏதாவது அபராதம் செய்து அதனால் தெய்வ கோபத்துக்கு உள்ளானானா? ஓங்கிய விதியினோ: எல்லாவற்றையும் மீறியுள்ள விதியினாலா; எனா: என்று-ஏங்கினான்.]

மேலும் சொல்லுகிறான்: ராமன் என்றால் சாமான்யப் பட்டவனா? குற்றமே செய்து விட்டான் என்று வைத்துக் கொள்ளுவோம். உலகத்தார் அதை எப்படி எண்ண வேண்டும்? பெற்ற தாயின் செயல் என்றல்லவா எண்ண வேண்டும்? அது இருக்கட்டும்; ராமன் காட்டுக்குப் போனது தந்தை இறந்ததற்குப் பிறகா? அல்லது முன்பா? தயவு செய்து சொல்லுங்கள்.

'தீயன இராமனே
செய்யு மேல், அவை
தாய்செயல் அல்லவோ
தலைத்து ளோர்க்கெலாம்?
போயது, தாதைவின்
புக்க பின்னரோ
ஆயதன் முன்னரோ
அருளு வீர்' என்றான்.

[போயது தாதை விண் புக்க பின்னரோ: ராமன் காட்டுக்குப் போனது தந்தை இறந்த பிறகா; ஆயதன் முன்னரோ: அப்படி இறந்ததற்கு முன்புதானோ; அருளுவீர்: சொல்லுவீர்.]

கைகேசியே பதில் சொல்லுகிறான்:

ராமன் குருக்களை இகழ்ந்தான் என்றுமில்லை; அடாத காரியத்தைச் செய்தான் என்றுமில்லை; தெய்வத்தின் கோபத்துக்கு உள்ளானான் என்றுமில்லை; சக்கரவர்த்தியாகிய தந்தை உயிரோடு இருக்கும்போதே காட்டுக்குப் போனான் என்று சொன்னான் கைகேசி.

கலைக்கு மரியாதை

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

மதுரை ஆயிரக்கால் மண்டபம் சிற்பவுலகின் அற்புதம். அதைக் கட்டச் சொன்னவர் விசுவநாத நாயக்கர்; கட்டியமைத்தவர் மந்திரி ஆரியநாதர் என்னும் செந்தமிழ் மந்திரி. ஆரிய நாயக்கர் தமிழிசை வாணரையும் சிற்பிகளையும் சிறப்பாக ஆதரித்தவர். பொன்னம்பலம் என்றொரு தமிழ்ச் சிற்பிதான் ஆயிரக்கால் மண்டபத்தில் காணும் உருவங்களைச் செதுக்கியவன். அவன் உளியை நாட்டினால், கல்லுடன் ஐக்கியமாவான்; கலைக் கனவில் உலகையே மறப்பான் — அவ்வளவு ஒருமையுடன் அவன் சிற்ப யோகம் புரிந்தான்! அமைத்த உருவங்கள் கல்லிற் செதுக்கிய கவிதைகள் போன்றன. ஆரிய நாயக்கர் அவன் கைத் திறமையைக் காண ஒரு நாள் விசுவநாத நாயக்கரை அழைத்தார். நாயக்கர் விஜய நகரில் படைத் தலைவரா யிருந்ததுடன், சிற்பத்திலும், இசையிலும் வல்லவர். தமிழ்ச் சிற்பிகளுக்கு அவர் மானியங்கள் தந்து அன்புடன் ஆதரித்தார். கலை யார்வத்தால் நாயக்கர் மந்திரிக்கு முன்பே புறப்பட்டு வந்தார்.



அச்சமயம் பொன்னம்பலம் மயில் வேல் முருகன் சிலையைச் செதுக்கினான். மயில் தோகையின் ஒவ்வொரு கண்ணையும் அவன் மிக நுட்பமான சிற்றுளி பிடித்துச் செதுக்கினான். அவன் உள்ளத்தில் ஆடிய கலை மயிலே முருகனுக்குக் கலாப மயிலாக அமைந்தது. நாயக்கர் அவன் வேலை நயத்தில் மனத்தைப் பறி கொடுத்து நின்றார். சிற்பிக்குத் தம்பலம் ஏந்தவும் கருவிகளை எடுத்துத் தரவும் ஏற்பட்ட சிற்றான் அங்கில்லை; சிற்பி, "அடே, எடு சிற்றுளி; கொண்டா தம்பலம்" என்றெல்லாம் சிற்றான் இருப்பதாக எண்ணி ஏவினான். விசுவநாத நாயக்கர் தாமே தம்பலம் பிடித்தார்; ஏவிய பணியைச் செய்தார்; நாயக்கர் ஒரு முறை தம்பலம் தாங்கும் போது ஆரிய நாதர் வந்து விட்டார். அவர் "மகாராஜா, இதென்ன?" என்றார். சிற்பி சட்டெனத் திரும்பினான். திடுக்கிட்டான். மன்னரைக் கண்டு, "ஆகா, மன்னிக்க வேண்டும்; சிற்றான் என்றெண்ணினேன்" என்றான்.

"பொன்னம்பலம், சிற்பத்திற்கு நீ அரசன். உன் கலைக்கு நான் தொண்டன்; மந்திரி, சிற்பம் அரிய கலை; அது காலத்தை வென்று நமக்கு அழியாப் புகழைத் தரும் அற்புதக் கலை. நமது நாட்டு வரலாறும் நாகரிகமும் கோயில்களில் சிற்பச் செல்வமாக விளங்குகின்றன. நாவலனின் எழுத்தாணியை விடச் சிற்பியின் உளியே ஒரு நாட்டின் புகழை நீடூழி காக்கிறது. கலைதான் ஒரு நாட்டின் விலை; கலையே ஒற்றுமைக்கு வழி. இன்று கலைக்கு மரியாதை செய்து மகிழ்ந்தேன்" என்றான் ரசிகனான அரசன்.

அன்புள்ள வேந்தன்
அருங்கலைச் சிற்பிக்குத்
தம்பலந் தாங்கித்
தலைசெய்தான் — பண்புள்ள
நல்லகலைக் கோயிலை
நாடிப் பணிசெய்வார்
எல்லாரும் ஓர்நிகரென்
றெண்.

தகப்பனருமாகிய ஸ்ரீ வி. கிருஷ்ண அய்யரின் உருவப் படத்தைத் திறந்து வைத்து, ஸ்ரீ கிருஷ்ண அய்யரின் நல்ல குணங்களை வெகுவாகப் புகழ்ந்துரைத்தார்.

★ அன்று தலைமை வகித்துப் பேசிய ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியும் சரி, அவருக்கு முன்னும், பின்னும் பேசிய வக்கீல்களும் சரி, கும்பகோணத்தைப் பற்றி அடித்துக் கொண்ட பெருமை சொல்லி முடியாது.

அவர்கள் பேசின ரீதியைப் பார்த்த போது, "எங்க அக்காளுடைய மாமியாருடைய அம்மங்காளுடைய தாத்தாவின் மாமிடாரின் கொள் பேத்தி கும்பகோணத்தில்தான் பிறந்தாள்" என்றெல்லாம் கூடப் பெருமை யடித்துக் கொள்ள ஆரம்பித்து விடுவார்களோ என்று பயந்து விட்டேன்.

அன்று ஜாம், ஜாம் என்று கொட்டு மேளம் வாசித்துக் கொண்டிருந்தவர்களுக்குக் கூட, தாங்கள் கும்பகோண வாசிகள் என்ற ஞாபகம் வந்ததும், சந்தோஷம் தாங்க முடியவில்லை. உள்ளே கூட்டம் நடந்து கொண்டிருப்பதைக்கூடக் கவனிக்காமல் கூட்டத்துக்கு நேரம் கழித்து வந்தவர்களுக் கெல்லாம் கொட்டு மேளம் கொட்ட ஆரம்பித்தார்கள். கூட்டத்துக்கு அரை மணி நேரம் கழித்து வந்த ஸர் அல்லாடிக்கு இத்தகைய வரவேற்பு கிடைத்ததைப் பார்த்தபோது, நாமும் கூட்டத்துக்கு நாழி கழித்து வராமல் போனேமே என்று எனக்கு வருத்தமாயிருந்தது.

★ பத்தே முக்கால் மணியிருக்கும், அதுவரை மேடையில் நடு நாயகமாக உட்கார்ந்து கொண்டிருந்த ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி பக்கத்தில் ஸர் அல்லாடி உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு மாறினர். ஸர் அல்லாடி சாஸ்திரியார் நாற்காலிக்கு மாறினர். தங்க விழாக் கொண்டாட்டம் முடிந்து, மகாநாடு ஆரம்பித்து விட்டது என்பதற்கு இது அடையாளமாக விளங்கிற்று.

அன்று ஸர் அல்லாடி செய்த தலைமைப் பிரசங்கத்தை ஸர் அல்லாடிதான் செய்திருக்க முடியும், தலைமைப் பிரசங்கம் அத்தனை அழகாக அமைந்திருந்தது. அவர் தலைமைப் பிரசங்கத்தில் மிகவும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய அம்சம் ஜனங்களின் பிரஜா உரிமைகளைக் காக்கும் விஷயத்தில் வக்கீல்களின் கடமை என்ன என்பதை அவர் எடுத்துக் கூறியதுதான்.



அவசரச் சட்டங்கள் அமோகமாக மலிந்து கிடக்கும் இந்தக் காலத்தில், சர்க்கார் போடும் எல்லாச் சட்டங்களுமே சட்டத்துக்குட்பட்டவை என்று சொல்ல முடியாது என்றும் இச்சட்டங்களினால் பொது ஜனங்களின் பிரஜா உரிமைகள் பறிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது வக்கீல்களின் புனிதமான கடமை என்றும் சொன்னர். அவ்வப் பொழுது பிறப்பிக்கப்படும் புதுப் புது சட்டங்களை வக்கீல்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும், அங்கங்கே வக்கீல்கள் ஒன்று சேர்ந்து, பிரஜா உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படும்போல் தோன்றும் வழக்குகளில் தாங்களே வலுவில் முன் வந்து உதவியளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அன்று மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு உண்ட களைப்பைக் கூடப் பார்க்காமல் விஷயாலோசனைக் கமிட்டி கூடிற்று. 38 தீர்மானங்களை அலசி ஆராய்ந்து பார்த்து, நிறைவேற்றிய பிறகு சாயந்திரம் ஏழு மணிக்கு மகாநாடு முடிவுற்றது.

★ அன்று மத்தியானம் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கையிலும் சரி, ராத்திரி சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கையிலும் சரி, இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளாத வக்கீல்களைக் குறித்து கண்ணீர் உகுத்தேன்.

"ஐயோ! இவ்வளவு நல்ல சாப்பாட்டை உத்தேசித்தாவது அவர்களும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கக் கூடாதா?" என்று எனக்கு இருந்தது. எத்தனை விதப் பச்சடிகள்! எத்தனை வித கறிகாய்கள், எத்தனை வித சாம்பார்கள்! ஆனல் அவர்களைக் குற்றம் சொல்லியும் பிரயோசனமில்லை. மகாநாட்டுக்கு வரும்படி எல்லா வக்கீல்கள் சங்கத்துக்கும் அழைப்புகள் அனுப்பினவர்கள் சாப்பாட்டைப் பற்றி ஒரு வார்த்தையாவது குறிப்பிட்டிருந்தார்களா? கிடையாது. பின் மகாநாட்டுக்கு ஆஜராகாமல் 'ஸம்மன்'னைத் திருப்பியனுப்பி விட்ட வக்கீல்களைக் குற்றம் சொல்லி என்ன பிரயோசனம்?

ஐந்து ரூபாய் பரிசு: *சென்ற இதழில் வெளியான "உரைக்கவில்லை" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஷண்முகம், தருமபுரம் ரோடு, மாயவரம்.*



மகாநாடு

இருங்கள். பொழுது விடிந்ததும் சென்னைக்குப் போய் விடலாம்" என்றார்.

எனக்கு விஷயம் புரியவில்லை. கும்பகோணத்துக்கு வாருங்கள் என்று பிரத்தியேகமாக அழைத்து விட்டு, எதற்காகத் தஞ்சாவூருக்குப் போகச் சொல்கிறார், பிறகு உடனேயே சென்னைக்குப் புறப்பட்டுப் போங்கள் என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாதவண்ணம் தள்ளுகிறார் என்று இருந்தது. ஒன்றும் புரியாமல் அவரைப் பின் தொடர்ந்து பத்தடி சென்ற பிறகு தான் விஷயம் புரிந்தது.

பள்ளிக்கூடத்தில் இருந்த ஒவ்வொரு வகுப்பு அறைக்கும் தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, செங்கல்பட்டு, சென்னை என்று இம்மாதிரி பெயர் எழுதி ஒட்டியிருந்தார்கள். அந்தந்த ஊர் பிரதிநிதிகள் அவரவர்களுக்கென்று ஒதுக்கப் பட்டிருந்த அறையில் தங்குவதற்காகச் செய்யப் பட்டிருந்த ஏற்பாடு இது. இதன் படியே நான் முதலில் "தஞ்சாவூரில்" போய்த் தங்கினேன். (ஆறாவது பாரம் வகுப்பில்தான் "தஞ்சாவூர்" இருந்தது.) ஆனால், அடுத்த நாள் காலை "சென்னைக்குப் புறப்படு" என்று ஸ்ரீ ராஜகோபால அய்யர் என்னைக் கேட்டுக் கொண்ட போது நான் கண்டிப்பாக முடியாது என்று மறுத்து விட்டேன். நீங்களே சொல்லுங்கள், ஆறாவது பாரத்திலிருந்து இரண்டாவது பாரத்துக்குப் போ என்றால் யார் தான் போவார்கள்?

★ காலையில் காப்பி, டிபன் முதலியன சாப்பிட்டானதும் பக்கத்தில் இருந்த போர்ட்டர் டவுன் ஹாலுக்கு எல்லோரும் போனோம். கும்பகோணம் வக்கீல்கள் சங்கத்தின் தங்க விழாக் கொண்டாட்டம் அன்று காலையில் ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரிகள் அவர்களின் தலைமையில் நடப்பதாக இருந்தது.

ஆனால் எனக்கு என்னமோ கடைசி வரையில் சந்தேகம்தான். பொதுவாக நம் வக்கீல்களுக்கு என்ன தெரிந்தாலும் தெரியா விட்டாலும் ஒரு விஷயம் வெகு நன்கு தெரியும். கோர்ட்டில் எதற்கு எடுத்தாலும் வாய்தா வாங்கும் வழக்கத்தைத்தான் குறிப்பிடுகிறேன். இந்த வழக்கம் அவர்கள் தேகத்தோடு ஊறிப் போய் இருக்கிறபடியால் இதே ஞாபகத்தில் எங்கே மகாநாடு, தங்க விழாக் கொண்டாட்டம் இரண்டுக்கும் வாய்தா வாங்கிக் கொண்டுபோய் விடுவார்களோ என்று திகிலாகவே இருந்தேன்.



ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்

நல்ல வேளை, அப்படி ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. சரியாக ஒன்பது மணிக்குக் கொட்டுமேள கோஷத்தோடு கும்பகோணம் வக்கீல்கள் சங்கத்தின் தங்க விழாக் கொண்டாட்டம் ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரிகள் அவர்களின் தலைமையின் கீழ் ஜாம், ஜாம் என்று ஆரம்பமாயிற்று.

கும்பகோணம் வக்கீல்கள் சங்கத்தின் தலைவரான ஸ்ரீ டி. கே. சிவராம அய்யர் ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியை மாலை போட்டு வரவேற்று, சிறு சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு சாஸ்திரியார் இந்த வக்கீல்கள் சங்கத்தின் முதல் தலைவரும், ஸ்ரீ டி. கே. சிவராம அய்யரின்



வக்கீல்கள்

நாடோடி

★ வக்கீல்கள் என்றாலே எனக்குப் பயம். தெனாலிராமன் பூனை பாலைக்கண்டு நடுங்க ஆரம்பித்ததே, அதைப் போல நானும் வக்கீல்களைக் கண்டு நடுங்க ஆரம்பித்து விட்டேன். நின்றால் பீஸ், உட்கார்ந்தால் பீஸ், வாயைத் திறந்தால் பீஸ், வாயை மூடினால் பீஸ் என்று கேட்கிறவர்களைக் கண்டால் யாருக்குத் தான் நடுக்கமாயிராது?

ஆனால் வக்கீல்கள் என்றால் எப்பொழுதுமே பீஸைக் கொண்டா என்று கையைக் காட்டுகிறவர்கள் அல்ல, பீஸ் கேட்கும் விஷயத்தில் எப்படிக் கூசாமல் கேட்டு நம்மைத் திகைக்க அடிக்கிறார்களோ, அதைப் போலவே விருந்தினர்களை உபசரிக்கும் விஷயத்திலும் கூசாமல் ஒன்றுக்கு நூறாகப் போட்டுத் திகைக்க அடிக்கக் கூடியவர்கள் என்பது போன ஞாயிற்றுக்கிழமை கும்பகோணத்தில் நடந்த வக்கீல்கள் மகாநாட்டி விருந்து தெரிந்தது.




ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார்

★ கும்பகோணம் ஸ்டேஷனில் நான் இறங்கியதுதான் தாமதம், சில வக்கீல்கள் மாலைகளைத் தூக்கிக்கொண்டு, குடுகுடு என்று நான் இருந்த வண்டியை நோக்கி ஓடி வந்தனர். எங்கே என் கழுத்தில் மாலையைப் போட்டு விடப் போகிறார்களோ என்று பயந்து நான் சடக்கென்று கழுத்தை உள்ளுக்கு இழுத்துக் கொண்டேன். நான் தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்ட சமயமும் பக்கத்து வண்டியில் இருந்த ஸர் அல்லாடி கழுத்தை வெளியில் நீட்டிய சமயமும் ஒன்று சேரவே, ஸர் அல்லாடியின் கழுத்தில் மாலை விழுந்தது. கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்றி விட்டு ஸர் அல்லாடி வண்டியை விட்டுக் கீழே இறங்கினார். ஸ்டேஷனுக்கு வந்திருந்த பாதி வக்கீல்கள் அவரைப் பின் தொடர்ந்தனர்.


சரி, வம்பு விட்டது, நாம் மாட்டில் எங்கேயாவது போய்த் தங்குவோம் என்று இருக்கையில் நாலைந்து வக்கீல்கள் என்னையும் என் மூட்டையையும் குண்டுக் கட்டாகத் தூக்கி, இவர்கள் முன் கூட்டியே தயாராகக் கொண்டு வந்திருந்த பஸ்ஸில் போட்டார்கள். பிறகு ஒருடம்ளர் காப்பி கொடுத்தார்கள். காப்பி குடித்து முடிந்ததும் பஸ் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலை நோக்கிப் பறந்தது. இத்தனை நேரமும் உள்ளூர் வக்கீல் ஸ்ரீ ராஜகோபால அய்யர் என்னையேதான் பின் தொடர்ந்து கொண்டிருந்தார். என்னைப் பத்திரமாகப் பாதுகாக்கும் வேலையை அவருக்கு ஒப்படைத்திருந்தார்கள் போலிருக்கிறது!

★ மகாநாட்டுப் பிரதிநிதிகளை யெல்லாம் வரவேற்று உபசரிப்பதற்கு டவுன் ஹைஸ்கூலில் ஏற்பாடு செய்திருந்தார்கள். டௌன் ஹைஸ்கூல் சென்றதும், ஸ்ரீ ராஜகோபால அய்யர் என்னைப் பார்த்து, "இன்றைக்குத் தஞ்சாவூரில்



இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி!

★



இலங்கை இந்தியர் காங்கிரஸ் அழைப்புக் கிணங்கித் தமிழ் நாட்டுத் தலைவர் ராஜாஜி அவர்கள், இம்மாதம் 28-ந் தேதி காலை சென்னையை விட்டுப் புறப்பட்டு, அதே மாலை கொழும்பு போய்ச் சேர்கிறார். இலங்கையில் ஒரு வாரம் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு, மே மாதம் 5-ம் தேதி சென்னை வந்து சேர்கிறார்.

மானது விலைவாசிகள் வீழுவதற்குப் பெரிதும் காரணமாயிருந்தது.

விலைவாசிகள் மளமளவென்று விழுவே, விவசாயிகளைத் தரித்திரம் சூழ்ந்தது. அவரவர்களின் வீட்டு ஸ்திரீகளின் கழுத்திலும் கையிலும் இருந்த தங்க நகைகளைக் கழற்றி விற்று விவசாயிகள் நிலவரி கொடுத்தார்கள். அப்படி விவசாயிகள் விற்ற தங்கம் பெரும்பாலும் இங்கிலாந்துக்குப் போய்ச் சேர்ந்தது.

அந்தக் காலத்தில் உலகமெல்லாம் பொருளாதாரக் குழப்பம் நேர்ந்திருந்தது. தங்கத் திட்டத்தை விடுவதா, வைத்துக் கொண்டிருப்பதா என்று பிரிட்டிஷ் சர்க்கார் யோசனை செய்து கொண்டிருந்தார்கள். எப்படியிருந்தாலும், அச்சமயம் இங்கிலாந்தில் தங்கத்தைச் சேர்ப்பது அவசியமாயிருந்தது. சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் சர்க்காரும் இங்கிலாந்து பாங்கி முதலாளிகளும் அவ்விதம் விரும்பினார்கள். அவர்கள் விரும்பினார்களோ, இல்லையோ, இந்தியாவின் ஏழை விவசாயக் குடும்பங்களின் கழுத்து-காதுகளில் இருந்த தங்கமெல்லாம் இறகு கட்டிக் கொண்டு இங்கிலாந்தை நோக்கிப் பறந்தது. இந்தியாவில் விஷயம் தெரிந்தவர்கள் பலர் "ஐயோ! ஐயோ!" என்று அடித்துக் கொண்டார்கள். அதனால் ஒரு பயனும் விளையவில்லை.

மறுபடியும் இந்த யுத்தத்திலும் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. இந்திய சர்க்கார் காகித நோட்டுக்களை அச்சடித்துத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள், வியாபாரிகள், கண்டிராக்டர்கள், உத்தியோகஸ்தர்கள் எல்லாருடைய கையிலும் காகிதப் பணம் கிடந்து உருளுகிறது; புரளுகிறது. இந்தியாவிலிருந்து யுத்தத்துக்காக வேண்டிய சாமக்கிரியைகளும், உணவுப் பொருள்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக இங்கிலாந்து இந்தியாவுக்குக் கொடுக்க வேண்டிய தொகை இது வரையில் ஆயிரங் கோடி ஆகி விட்டது! இன்னும் உயர்ந்து கொண்டே போகிறது.

இப்படி எல்லையில்லாமல் இந்திய சர்க்காரின் நோட்டுச் செலாவணியும், இங்கிலாந்து இந்தியாவுக்குக் கொடுக்க வேண்டிய கடனும் உயர்ந்துகொண்டே போக முடியுமா? போனால், காரியம் ஒரேயடியாகக் கெட்டுப் போகலாமல்லவா? மேலும், யுத்தத்துக்குப் பிற்பாடு இந்தியாவுக்குப் போடுகிற நாமமானது, இந்தியாவின் நெற்றிக்குள்ளே அடங்குகிற நாமமாயிருக்க வேண்டுமல்லவா? அதற்காக அவ்வப்போது சில காரியங்களைச் செய்து நோட்டுச் செலாவணியையும் இங்கிலாந்தின் கடனையும் கட்டுக்குள் அடக்கி வைக்க வேண்டியது அவசியம்.

அதற்கு ஒரு வழியாகத்தான் இப்போது இங்கிலாந்து பாங்கி இந்தியாவுக்குத் தங்கத்தை அனுப்பி வருகிறது. இந்தியாவில் என்ன விலை கொடுத்தாயினும் தங்கம் வாங்க விரும்பும் அசடுகளும் புத்திசாலிகளும் எவ்வளவோ பேர் இருப்பது பிரிட்டிஷாருக்குத் தெரியும். ஆகவே, தங்களிடமிருந்த பழைய தங்கத்தையும் அனுப்புகிறார்கள்; தென்னாப்பிரிக்காவில் புதிதாக வாங்கியும் அனுப்புகிறார்கள்.

இதிலே இரண்டு காரியங்கள் சாதகமாகின்றன. தம்பிடிக்குத் தம்பிடி விதம் - அதாவது 100 க்கு 100 விதம் லாபமும் கிடைக்கிறது! இந்தியாவின் நோட்டுச் செலாவணியையும் இங்கிலாந்தின் கடனையும் ஓரளவு குறைக்க முடிகிறது.

இவ்வளவுக்கும் மேலாக இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு. இப்போது இந்தியாவுக்குத் தங்கம் அனுப்புகிறார்கள் அல்லவா? அனுப்புகிற தங்கம் எங்கே போய்விடப் போகிறது? இந்தியாவுக்குள்ளே தானே இருக்கும்? ஒன்று, ஸ்திரீகளின் கழுத்திலும் கையிலும் இருக்கும். அல்லது தரையில் புதைக்கப்பட்டிருக்கும். இருக்கட்டும், இருக்கட்டும். யுத்தம் முடியட்டும். அப்பொழுது நாணயச் செலாவணியில் ஒரு பேத்துமாத்து செய்து, விலைவாசிகள் மடமடவென்று விழும்படி செய்தால், பூமிக்குள் புதைந்திருக்கும் தங்கம் கூட, தானே வெளியில் கிளம்பி, ஆகாசத்தில் பறந்து, இங்கிலாந்து நோக்கிச் செல்லாதா?

* * *

சீடிய சீக்கிரத்தில் இந்தியாவில் தேசிய சர்க்கார் ஏற்படாவிட்டால் இது போன்ற எத்தனையோ நஷ்டங்களுக்கு இந்தியா உள்ளாகும்படி நேரிடும். ஆனால், யுத்தம் முடியும் சமயத்தில் இந்தியாவில் தேசிய சர்க்கார் இல்லாவிட்டாலோ, கேட்கவே வேண்டியதில்லை. யுத்தம் முடிந்து இரண்டு மூன்று வருஷத்திற்குள் இந்தியா அடையப்போகிற நஷ்டத்தை அப்புறம் ஐம்பது வருஷத்தில் ஈடு செய்ய முடியுமா என்பதும் சந்தேகந்தான்.

துக்கு விற்கிறார்கள்? நமது மார்வாரிகளும், ஸேட்டுகளும் மற்றக் காசுக் கடைக்காரர்களும் பவுனுக்குக் காலணாவும், அரையணாவும், சமயோசிதம் போல் ஒரு அணாவுங்கூட லாபம் வைத்துக் கொள்ளையடிக்க, பிரிட்டிஷ் சர்க்கார் விற்கும் தங்கத்துக்குக் கேவலம் தம்பிடிக்குத் தம்பிடி லாபத்துடன் திருப்தி யடைவதை எவ்வாறு பாராட்டுவது? இந்தச் சொற்ப லாபத்திலே அந்தத் தரித்திரம் பிடித்த தென்னாப்பிரிக்கா சர்க்கார் லாபங் கேட்பது எத்தகைய அநியாயம்?

* * *

"இந்தியாவிலிருந்து தங்கம் பறிபோகிறது; கொள்ளை போகிறது!" என்றெல்லாம் நாம் புகார் செய்து வந்திருக்கிறோம். இப்போது என்னடா என்றால், நாம் எந்த பிரிட்டிஷ் சர்க்கார்மீது தங்கத்தைக் கொள்ளைகொண்டு போவதாகப் புகார் செய்து கொண்டிருந்தோமோ, அதே பிரிட்டிஷ் சர்க்கார் கப்பல் கப்பலாகத் தங்கத்தைக் கொண்டுவந்து இந்தியாவிலே சேர்த்து வருகிறார்கள். இது என்ன அதிசயம்? நம்புவதற்குக் கூட முடியாமல் அல்லவா இருக்கிறது!

ஆனால், நம்பத்தான் வேண்டும். இதற்கு முன்னால் நம்பாவிட்டாலும், இனிமேல் நம்ப வேண்டும். அப்பேர்ப்பட்ட அவநம்பிக்கை கொள்ள முடியாத சாட்சியம் கிடைத்திருக்கிறது. பம்பாயில் சமீபத்தில் நடந்த விபத்தின் போது "இங்கிலாந்து பாங்கி" என்று முத்திரையிடப்பட்ட தங்கக் கட்டி (112 பவுண்டு நிறை; லட்ச ரூபாய் பெறுமான முள்ளது) கூரையைப் பொத்துக் கொண்டு விழுந்தது என்ற செய்தியைப் படித்தோ மல்லவா?

இவ்விதம் தங்கம் இப்போது இந்தியாவுக்குக் கொண்டுவரப்படும் நம்ப முடியாத — ஆனால் உண்மையான அதிசயத்தின் — உள் அந்தரங்கம் என்ன? இதை அறிந்து கொள்வதற்குச் சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு இந்தியாவில் என்ன நடந்தது என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த யுத்தத்தில் விலை வாசிகள் ஏறுவது போலத்தான் சென்ற யுத்தத்தின் போதும் விலைவாசிகள் உயர்ந்திருந்தன. யுத்தம் முடிந்ததோ, இல்லையோ, விலைவாசிகள் மள மளவென்று விழத்தொடங்கின. இந்திய சர்க்காரின் நாணய மாற்று விகித

என்று நினைக்கிறீர்களோ? அதுதான் இல்லை. அவனுடைய மனதில் ஒரு பகுதி யுத்தத்துக்குப் பிறகு நடக்க வேண்டிய வியாபாரங்களைப் பற்றியே சிந்தித்துப் 'பிளான்' போட்டுக் கொண்டிருக்கிறது.

யுத்தத்துக்குப் பிறகு இந்தியாவிலே என்னென்ன தொழில்கள் செய்யும்படி அநுமதிக்கலாம்? என்னென்ன சாமான்களை இந்தியா வெளிநாடுகளிலிருந்து தருவித்துக் கொண்டே ஆக வேண்டுமென்று ஏற்படுத்தலாம்? அப்படி இந்தியாவில் இறக்குமதியாகக் கூடிய சாமான்களில் எவ்வளவு பங்கு இங்கிலாந்திலிருந்து? எவ்வளவு பங்கு அமெரிக்காவிலிருந்து? மற்ற எல்லா வெளி நாடுகளுக்கும் சேர்த்து எவ்வளவு பங்கு கொடுக்கலாம்? இந்தியா விஷயத்தில் "நீ அவல் கொண்டுவா; நான் உமி கொண்டு வருகிறேன்; இரண்டு பேரும் ஊதி ஊதித் தின்னலாம்!" என்ற கொள்கையை எந்த விதத்தில் அமுலுக்குக் கொண்டுவருவது? மற்றக் குடியேற்ற நாடுகள் பிய்த்துக் கொண்டு போகிறேன் என்று கிளம்பினால் எப்படிச் சமாளிப்பது? — இம்மாதிரியான யோசனைகள் இங்கிலீஷ்காரனுடைய மனதில் உருண்டு புரண்டு கொண்டே இருக்கின்றன.

இவ்விதம் இங்கிலீஷ்காரனுடைய மனம் வேலைசெய்து கொண்டிருக்கிறதென்பது சென்ற வாரத்தில் காமன்ஸ் சபையில் நடைபெற்ற 'சாம்ராஜ்ய ஒற்றுமை' விவாதத்திலிருந்து நன்கு வெளியாயிற்று. யுத்தம் நடக்கும் மும்முரத்தில் வருங்கால வர்த்தகத்தைப் பற்றி பிரிட்டிஷ் மந்திரிகள் கவனிக்காமல் அலட்சியமாயிருந்து, அதனால் காரியம் குந்தகமாகி விடப் போகிறதே என்ற கவலையைச் சில பார்லிமெண்டு அங்கத்தினர்கள் தெரியப்படுத்தினார்கள். "அப்படியெல்லாம் ஒன்றும் நேர்ந்து விடாது!" என்று சர்ச்சில் ஸார் அபயப் பிரதானம் கொடுத்தார். "யுத்த நெருக்கடியில் வர்த்தகத்தை மறக்கிறவன் நானா? ஒரு நாளும் இல்லை. ஒரு நிமிஷங்கூட அதை நான் மறந்து விடவில்லை. அட்லாண்டிக் சாஸனத்திலே கூட மெதுவாக வர்த்தக உரிமையை நுழைத்திருக்கிறேனே! அதை நீங்கள் பார்க்கவில்லையா?" என்று கேட்டார்.

அட்லாண்டிக் சாஸனத்தில், உலகத்தின் வியாபார சுதந்திர அத்தியாயத்தில், "தற்சமயம் அமுலிலுள்ள வர்த்தக உரிமைகளுக்குக் குந்தகம் இல்லாமல்..." என்ற நிபந்தனையைச் சர்ச்சில்தான் நுழைத்தாராம்.

இன்னும் சர்ச்சில் பலவிதமான தேறுதல்களைப் பார்லிமெண்டுக்குக் கூறினார். "இங்கிலாந்து தாய்நாடு; மற்றக் குடியேற்ற நாடுகள் புதல்விகள்; புதல்விகள் அவரவர்களுடைய வீடுகளில் எஜமானிகள்" என்று கிப்ளிங் கூறியதை ஞாபகப்படுத்தி, "யுத்தத்துக்குப் பிறகு புதல்விகளைக் கலந்துகொண்டுதான் தாய் காரியம் செய்வாள்!" என்றார். அந்தப் புதல்விகளில் இந்தியாவும் ஒரு புதல்வியாயிருக்கும் என்ற தமது ஆசையையும் நம்பிக்கையையும் வெளியிட்டார்.

ஆனால், இந்தியா மற்றக் குடியேற்ற நாடுகளைப்போல் சொந்தப் புதல்வியாயிருக்குமா? இருக்க முடியுமா? அல்லது இப்போதுள்ளதைப் போலவே மாற்றாந் தாய் வயிற்றுப் பெண்ணாயிருக்குமா?

* * *

யுத்தத்துக்குப் பின்னால் என்ன நடக்கப் போகிறதென்பதை இப்போது என்ன நடக்கிறது என்பதிலிருந்து ஒருவாறு அறியலாம்.

சில காலமாக இந்தியாவில் பிரிட்டிஷ் சர்க்கார் தங்க விற்பனை செய்து வருவதைப் பற்றிப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. தென்னாப்பிரிக்காவிலிருந்து பிரிட்டிஷ் சர்க்கார் (அதாவது இங்கிலாந்தின் சர்க்கார் பாங்கி) தங்கத்தை வாங்கி இந்தியாவுக்கு அனுப்பி விற்பனை செய்கிறது. இந்த விற்பனையில் அப்படியொன்றும் பிரமாதமான லாபம் சம்பாதித்து விடவில்லை. தம்பிடிக்குத் தம்பிடி லாபந்தான்!

தென்னாப்பிரிக்காவில் அவுன்ஸ் ஒன்றுக்கு ஷில்லிங் 168 வீதம் வாங்கி வந்து இந்தியாவில் அவுன்ஸ் ஒன்றுக்கு ஷில்லிங் 320 வீதம் விற்கிறார்கள்!

வியாபாரம் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்? தொழில் என்றால் இப்படியல்லவா செய்ய வேண்டும்? இந்தியாவை ஏழைத் தேசம் என்று சொல்கிறார்களே, அந்த அபகீர்த்தியைப் போக்குவதற்காக, இங்கே தங்கத்தைக் கொண்டு வந்து தள்ளுகிறார்கள்! இப்படித் தள்ளுகிறவர்கள் என்ன பரோபகார சீலர்கள், பாருங்கள்! தங்கத்தின் பேரால் கொள்ளை லாபம் அடித்துவிட வேண்டுமென்று பார்க்காமல் என்ன சொற்ப லாபத்

தம்பிடிக்குத் தம்பிடி!

அவ்வளவுதான்; தம்பிடிக்குத் தம்பிடி லாபந்தான்! இந்தியாவில் இங்கிலீஷ்காரர்கள் செய்யும் வியாபாரத்தில் அதற்கு மேல் அவர்கள் லாபத்தை விரும்பவில்லை! அதற்கென்ன? சில சமயம் தம்பிடிக்கு இரண்டு தம்பிடி, மூன்று தம்பிடி லாபங்கூட அவர்களுக்குக் கிடைப்பதுண்டு. ஆனல் இதையே ஒரு நிஷ்கரிஷையாக அவர்கள் வைத்துக் கொள்வது கிடையாது. ஒரு தம்பிடிக்கு ஒரு தம்பிடி லாபங் கிடைத்தாலே அவர்கள் திருப்தியடையத் தயார்!

* * *

ஆதிகாலத்தில் முதன் முதலாக வெள்ளைக்காரன் இந்தியாவுக்கு வந்தபோது அவனுடைய வருகை விமரிசை எப்படியிருந்தது என்பதைப் பற்றி ஒரு கற்பனை உண்டு. முன்னல் பிள்ளையார் வேஷமாக ஒரு வெள்ளைக்காரன் முதுகிலே ஒரு பெரிய மூட்டையைச் சுமந்து கொண்டு வருவானும். இப்போதும் சில சீனுக்காரர்கள் வருகிறர்களே, அந்தமாதிரி. மூட்டைக் குள்ளே துணியோ, மணியோ, கிலு கிலுப் பையோ, பெருங்காயமோ, — இப்படி விற்பதற்குரிய சாமான் ஏதாவதுதான் இருக்கும். இந்த வியாபாரி வெள்ளைக் காரனுக்கு அடுத்தாற்போல் ஒரு கையில் துப்பாக்கியும் இன்னொரு கையில் சாராயப் புட்டியும் எடுத்துக் கொண்டு ஸோல்ஜர் வெள்ளைக்காரன் வருவானும். இவனுக்குப் பிறகு, செத்துப் போனவர்களைக் கரை சேர்ப்பதற்கும் மிச்சம் இருப்பவர்களை மோட்சத்துக்கு அனுப்புவதற்கும் கையில் பைபிளுடன் பாதிரி வெள்ளைக்காரன் வருவானும்.

இந்த வரிசைக் கிரமமாக இந்தியாவுக்கு வந்த வெள்ளைக்காரர்களிலே இங்கிலீஷ்காரன்தான் இங்கே நிலைத்து நின்றுன் என்பது எல்லாரும் அறிந்த விஷயம். ஏனென்ருல், மற்ற வெள்ளைக் காரர்களிடம் உள்ளதைக் காட்டிலும் ஒரு விசேஷ குணம் இங்கிலீஷ்காரர் களிடம் அதிகமாக உண்டு. அதுதான் பிடிவாதம் என்கிற குணம். அந்த குணத்தினுல்தான் இன்று இங்கிலீஷ் காரர்கள் தங்களுடைய உலக சாம் ராஜ்யத்தை விடாமல் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிருர்கள்.

அதிலும் இங்கிலீஷ்காரர்களுடைய பிடிவாத குணத்தை மற்றத் துறைகளிலே காட்டிலும் வியாபாரத் துறையிலேதான் பார்க்கவேண்டும்; ஸோல் ஜர் இங்கிலீஷ்காரன் சில சமயம் தன் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொண்டு பிடித்த இடத்தைக் கைவிட்டுப் பின் வாங்கினுலும் வாங்குவான். பாதிரி இங்கிலீஷ்காரன் இப்பொழுது எல்லாரையும் மோட்சத்துக்கு அனுப்ப வேண்டிய தன்னுடைய கடமையை மறந்து, "மகாத்மா காந்தி பெரிய மகான்; உண்மைக் கிறிஸ்துவர்!" என்று எதையாவது சொல்லி வைத்தாலும் வைப்பான்.

ஆனல் வியாபாரி இங்கிலீஷ்காரன் மாத்திரம் தன் வியாபாரத்தை மறக்க மாட்டான். பரமபதத்துக்குப் போனுல் அவன் கடவுளிடம் ஒரு பவுண்டன் பேனுவையாவது விற்கப் பார்ப்பான்; நரகத்துக்குப் போனுல் சைத்தானின் தலையில் ஒரு ரோல்ஸ்ராய் காரையாவது கட்டப் பார்ப்பான்.

"எத்தொழிலைச் செய்தாலும்
ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும்
மோனத்தே — வித்தகமாய்க்
காதி விளையாடி இரு
கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே
தான்!"

என்பதைப்போல், வியாபாரி இங்கிலீஷ் காரன் எங்கேயும் எந்த நேரத்திலும் என்ன வேலையில் ஈடுபட்டிருந்த போதிலும் யார் தலையில் என்ன சாமானைக் கட்டலாம், என்ன லாபம் சம்பாதிக்கலாம் என்று ஒரு புறத்தில் யோசனை செய்து கொண்டிருப்பான்.

பாருங்கள்! இப்போது நடக்கும் பயங்கரமான யுத்தத்தில் இரண்டு வருஷத்துக்கு முன்னல் வெற்றி தோல் வியைப் பற்றி நிச்சயம் இல்லாமலிருந்தது. இன்னமுங் கூட, பிரமாதமான பிரயத்தனங்கள் செய்துதான் ஜயத்தைக் கைப்பற்றியாக வேண்டுமென்று காஸினே முனை, மணிப்பூர் முனைப் போர்களிலிருந்து தெரிய வருகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் இங்கிலீஷ்காரனுடைய முழு மனமும் யுத்தம் நடத்துவதில் இருக்கிறது



வின் - ஸு - டாக்.

துக்குப் பிறகு நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றிப் பார்லிமெண்டில் பேச்சு வந்தபோது, மேற்படி சர்வதேசச் சங்கத்தைப் பற்றி யாரோ ஒருவர் அப சகுனமாய்க் குறிப்பிட்டார். அப்போது சர்ச்சில், "அந்தச் சர்வ தேச சங்கத்துக்குத் தக்க பலம் கொடுத்திருந்தால் அது வெற்றி யடைந்திருக்கும்" என்றாராம்.

இம்மாதிரி யெல்லாம் பதில் சொல்வதற்குப் பிரசித்தி பெற்ற தத்துவ சாஸ்திரிகளோ, பெயர் பெற்ற பிரதம மந்திரிகளோ வேண்டியதில்லை. நம்மைப் போன்றவர்களே சொல்லலாம். உதாரணமாக :—

1. பிரதம மந்திரி சர்ச்சிலுக்கு இன்னும் கொஞ்சம் புத்திசாலித்தனம் இருந்திருந்தால் இதற்குள் யுத்தத்தில் ஜயித்திருப்பார்.

2. இந்திய மக்கள் அவ்வளவு பேரும் மகாத்மா சொல்கிறபடி கேட்டிருந்தால், இந்தியாவுக்கு இதற்குள் சுதந்திரம் கிடைத்திருக்கும்.

3. ஜப்பானியர்கள் இவ்வளவு கெட்டிக்காரர்களா யில்லாம லிருந்தால் இதற்குள் அவர்களை உதைத்து விரட்டியிருக்கலாம்.

4. உலகத்தில் எல்லா மனிதர்களும் அஹிம்ஸா தர்மத்தை மேற்கொண்டால், யுத்தமென்பதே ஏற்படாது.

5. உலகத்தில் எல்லாரும் பணக்காரர்களாகி விட்டால், தரித்திரம் என்பதே இராது.


6. உலகத்தில் எல்லாரும் நிஜம் சொல்ல ஆரம்பித்து விட்டால், பொய் என்பதே இல்லாமற் போய் விடும்.

இப்படி முடிவில்லாமல் எத்தனையோ உதாரணங்கள் நாம் சொல்லிக் கொண்டு போகலாமல்லவா? இதற்குத் தத்துவ சாஸ்திரிகள் என்னத்திற்கு? பிரதம மந்திரிகள்தான் என்னத்திற்கு?




மதராஸ் D. J. கிமேர் & கம்பெனி மானேஜர் ஸ்ரீ P. S. G. ராவ் அவர்களின் இளைய சகோதரர் லெப்டினண்ட் P. K. ராவுக்கும் ஜாயிண்டு ரிஜிஸ்டிரார் A. வெங்கட சுப்பராவ் B. A. அவர்களின் குமாரத்தி சௌபாக்யவதி ராதாவுக்கும் சென்ற 9-4-1944ல் மதராஸில் திருமணம் இனிது நடந்தேறியது.

-உம்மன்


வைஸ்ராய் வேவல் அரசியல் பிரச்னையைக் கண்டு ஓடி ஒளிகிறார்.
அரசியல் பிரச்னை
வேவல்
கன்ஸர்வேட்டிவ் கட்சி
தொழிற் கட்சி
ஏகாதிபத்தியம்
தலை இரண்டானலும் ஆள் ஒருவரே தான்.

நிகழ்ச்சிச் சித்திரம்



"எதிர் நடவடிக்கை எடுப்போம்" என்று இந்திய சர்க்கார் பயமுறுத்தியதும் தென்னாப்பிரிக்க சர்க்கார் இந்தியர் முடக்கல் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டனர்.

கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிட்டி பாப்பா — பாரதியார் | இதழ் 29

என்ன சேதி?

'ஹம்பக்' சாஸ்திரிகள் ●

உலகம் சீர் திருந்தி உருப்படுவதற்கு அவ்வப்போது யோசனைகள் சொல்லும் சில தத்துவ சாஸ்திரிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஆங்கிலத்தில் 'பிலாஸபர்'கள் (Philosophers) என்று பெயர். உதாரணத்துக்கு, ஆங்கில நாட்டு பெர்னார்ட் ஷா, சீன தேசத்து லின்-யூ-டாங், இந்தியாவின் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியவர்களைச் சொல்லலாம்.

சீன தத்துவ சாஸ்திரியான லின்-யூ-டாங், "என் தேசம்" "உயிர் வாழ்வதின் முக்கியம்" முதலிய பிரசித்த நூல்களை எழுதியவர். சமீபத்தில் இவர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். வழக்கம் போல் பத்திரிகை நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கேள்வி கேட்டார்கள். "இந்தியா எப்படிச் சுதந்திரம் பெறுவது?" என்று ஒருவர் கேட்டார். இந்தக் கேள்விக்கு, அந்தத் தத்துவ சாஸ்திரி, "இந்தியர்கள் நாற்பது கோடிபேரும் எப்போது சுதந்திரத்தைத் தீவிரமாய் வேண்டுகிறார்களோ, அப்போது சுதந்திரம் கட்டாயம் வந்துவிடும்" என்றார். ஆனால், நாற்பது கோடி இந்தியர்களையும் சுதந்திரத்தைத் தீவிரமாய் விரும்பச் செய்யும் வழி என்ன? அதை டாக்டர் சொல்லவில்லை.

நம் நாட்டுத் தத்துவ சாஸ்திரியான ஸர் ராதாகிருஷ்ணன் சமீபத்தில் பம்பாயில் ஒரு பட்டமளிப்பு விழாவில் பேசினார். "பயமும் துவேஷமும் நீங்கிச் சுதந்திரமும் அன்பும் நிரம்பிய ஆதர்ச உலகத்தைச் சிருஷ்டிப்பது எப்படி?" என்று அவர் ஒரு கேள்வியைப் போட்டுக் கொண்டார். அதற்கு, "உலகத்தில் பேராசையும் சுயநலமும் பூண்டோடு ஒழிய வேண்டும்; ஒழிந்தால் ஆதர்ச அன்பு உலகத்தை அமைக்கலாம்" என்று பதிலும் கூறினார். ஆனால், உலகிலிருந்து பேராசையையும் சுயநலத்தையும் எப்படி ஒழிப்பது என்று அவர் கூறவில்லை.

இம்மாதிரியான தத்துவ சாஸ்திரிகளின் கூற்றுக்களைப் படிக்கும்போது, அவர்களைத் தத்துவ சாஸ்திரிகள் என்று அழைப்பதைக் காட்டிலும் 'ஹம்பக்' சாஸ்திரிகள் என்று அழைப்பது பொருத்தமாயிருக்குமென்று தோன்றுகிறது.



ஸர் ராதாகிருஷ்ணன்

என்னத்திற்கு? ●

சாதாரணமாய்த் தத்துவ சாஸ்திரிகள் பேசுவது போலவே முதன் மந்திரி சர்ச்சில் சமீபத்தில் ஒரு விஷயம் கூறினார். போன யுத்தத்துக்குப் பிறகு "சர்வ தேசச் சங்கம்" என்று ஒரு சங்கம் ஸ்தாபித்தார்கள் அல்லவா? அது மாண்டு மடிந்து போயிற்றல்லவா? இந்த யுத்தத்

கம்பன் கழகம், கல்கத்தா

தமிழ் நாட்டு அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

தமிழ் நாட்டில் வசிக்கும் தமிழ் மக்களிடையே தமிழ்க் கலை இலக்கியத்திற்காகச் சேவை செய்யும் நோக்கத்தோடு தாரண வருஷப் பிறப்பன்று, கல்கத்தாவிலே 'கம்பன் கழகம்' நிறுவியுள்ளோம். இக் கழகத்தில் ஓர் இலவச வாசக சாலையும் ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கு எழுத்தாளர்களும், புஸ்தக பதிப்பாளர்களும், பத்திரிகாலயத்தார்களும் அன்பளிப்பாக புஸ்தகங்களும் பத்திரிகைகளும் அனுப்பி வட நாட்டிலிருக்கும் தமிழ் மக்களுக்கு தமிழ்த் தொண்டு புரிய உதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொ. சுப்பையா,
கௌரவ காரியதரிசி, கம்பன் கழகம்,
11, ஜட்டின் தாஸ் ரோட்,
இராஷ்பிகாரி அவென்யூ போஸ்டு,
கல்கத்தா.

கல்கி

பொருளடக்கம்

மலர் 3 | இதழ் 29 — 1944 ஏப்ரல் 30 — தாரண ஆ | சித்திரை 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளின் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

★



★

போர் முனையில் ருஷ்யாவானது எத்தனையோ அதிசயங்களை விளைந்து வருகிறது. இநாஜியின் ராட்சஸ நாஜிப் படைகளை ஓர் அங்குலம் நகர்த்துவதற்கு பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் எவ்வளவோ முக்கி முனக வேண்டியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட நாஜிப் படைகளை ருஷ்யர்கள் ஆயிரக் கணக்கான மைல்கள் விரட்டியடித்து முன்னேறி வருகிறார்கள். ஆனால் போர்முனையில் அவர்கள் நிகழ்த்துகிற அதிசயங்களைக் காட்டிலும், அரசியல் முனையில் அதிக விந்தைகளைச் செய்கிறார்கள். ஜப்பானியர் பிடித்துக் கொண்டிருக்கும் பர்மாவைத் திருப்பிப் பிடித்ததும் சுதந்திரம் கொடுக்கிறோம் என்று சொல்ல பிரிட்டிஷாருக்கு மனம் வரவில்லை! ருஷ்யப் படைகள் ருமேனியாவின் எல்லைக் கருகில் வந்ததும் ருஷ்ய சர்க்கார் என்ன செய்தார்கள்? "ருமேனியாவில் ஓர் அடி பூமிகூட எங்களுக்கு வேண்டாம் ருஷ்ய சமுதாய அமைப்பிலும் நாங்கள் தலையிடப் போவதில்லை!" என்று சொன்னார்கள். மேற்படி அறிக்கையை வெளியிட்டு, ருஷ்யர்களின் அரசியல் அறிவுக் கூர்மையைப் பற்றி உலகமே பிரமிக்கும்படி செய்த ருஷ்ய அயல் நாட்டு மந்திரி தோழர் மொலொடாவ் தமது மேதையின் இம்முறை காட்டியளிக்கிறார். ருஷ்ய அரசாங்கத்தில் ஸ்டாலினுக்கு அடுத்த பெரிய பதவி வகிப்பவர் இந்தத் தோழர் மொலொடாவ்தான். "மொலொடாவ் கூடை" என்று வழங்கும் ஒன்று நூறாகும் விசித்திர வெடி குண்டினாலும் இவர் பெயர் பிரசித்தி யடைந்திருக்கிறது.


நீள பிரகாசமுள்ள கூந்தலுக்கு
ஸ்வஸ்திக் பரிமள காஸ்டராயில்